ஜனவரி 2007 JANUARY இதழ் 192 ISSUE

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION


தேசத்தின் குரல்


நாட்டுப்பற்றாளர் நவம்


முதலிடம்


விருது


பட்டமளிப்பு

**தமிழர் தகவல்
அடுத்த இதழ்
16வது ஆண்டு
பூர்த்தி மலராக
விரிகின்றது.**

16 வது ஆண்டில் th Year

Growing
with the
Community
ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box -3, Station 'F'
Toronto, ON. M4Y 2L4

Phone: (416) 920-9250
Fax: (416) 921-6576

**email:**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil
Information Centre
(ETHIC) of Toronto
&
Thamil Information
Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editors**
Sasi Pathmanathan
Vijay Ananth
Anton Kanagasooriyar

**General Manager**
S.T. Singam

**Public Relation**
R. R. Rajkumar
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan
S. Thirumuruga

**Technical Support**
Haran Graph &
Thamil Creators

**Typesetting**
**Layout & Design**
Ahilan Associates

**Printers**
Ahilan Associates
(416) 920-9250

**PUBLISHED MONTHLY**
5000 Copies

## ஆசிரியரிடமிருந்து . . . . . . . . . . . FROM THE EDITOR

2007ம் ஆண்டு பிறந்துள்ளது. இந்த மாதத்தில், 'தமிழர் தகவல்'தனது அமைதியான ஓட்டத்தில் பதினாறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்றது. தகவலுக்காக மட்டுமே இவ்வுலகில் வெளிவரும் ஒரேயொரு சஞ்சிகை என்ற பெருமையைக் கொண்ட 'தமிழர் தகவல்', தொடர்ச்சியாகக் காலம்-நேரம் தவறாமல் மாதாந்தம் வெளிவந்த ஒரேயொரு சஞ்சிகை என்ற சாதனையுடன் தமிழர்கள் மத்தியில் இன்று நிமிர்ந்து நிற்கின்றது. புகலிடத் தமிழர்களின் சாதனைகளில் 'தமிழர் தகவலும்' ஒன்று என்பதையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்ள முடிகின்றது. படைப்பாளிகள், வணிகர்கள், தொண்டர்கள், வாசகர்கள் அனைவரும் இந்த வரலாற்றுப் பயணத்தின் பங்காளிகள். அடுத்த இதழ் வழக்கம்போல வருடாந்த மலராக விரிகின்றது. மலர்ச்சியுடன் இதன் தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், கழிந்துபோன 2006ம் ஆண்டு பதிந்து சென்ற சில துயரங்களை இலகுவாக மறந்துவிட முடியாதுள்ளது எங்கள் நிலத்திலும் புலத்திலுமாக இவை நிகழ்ந்துள்ளன. சிங்கள அராஜகம் ஒருபுறம் பல இழப்புகளுக்குக் காரணமாகி நிற்க, இயற்கை சில இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது. யுத்தத்துக்காக சமாதானத்தைப் பேசி வரும் அசாதாரண சிறீலங்கா சனாதிபதி, கடந்தாண்டில் - தனது முதலாண்டு ஆட்சிக் காலத்தில் தமிழின அழிப்பைத் தமது இலட்சியமாகக் கொண்டு இயங்கி வந்துள்ளார். ஆட்கடத்தல், வகைதொகையற்ற கைது, காணாமல் போதல், படுகொலைகள் என்பன மகிந்த ஆட்சியின் சாதனைகள். தமிழ் அகதிகள் உருவாக்கம், உள்நாட்டு இடப்பெயர்வு, அகதிகள் முகாம்கள் மீது விமானக் குண்டு வீச்சு, பாடசாலைகள் வழிபாட்டுத்தலங்களை இலக்கு வைத்துத் தாக்குவது என்பன இவரது பெருமைச் செயற்பாடுகள். இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுவதும், அதில் மனித சடலங்கள் மிதப்பதும், அதனைப் பார்த்து ரசிப்பதும் மகிந்தருக்குப் பிடித்தமான விளையாட்டு. மக்களைப் பட்டினி போட்டு அவர்கள் மரணிப்பதைப் பார்த்து ரசிப்பதில் இவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூகப் பிரமுகர்கள், தமிழர் விடுதலையின் நேசபக்தர்கள் இவரது ஒவ்வாமைகள். திருவாளர்கள் ஜோசப் பரராஜசிங்கம் ரவிராஜ், விக்னேஸ்வரன், சிவமகாராஜா போன்ற மாமனிதர்கள் மகிந்தரின் 'ஒவ்வாமை' (அலர்ஜி) நோய்க்கு ஓராண்டுக்குள் இரையானவர்கள். இலக்கிய, எழுத்துலகைப் பொறுத்தளவில் ஏ. ஜே. கனகரத்தினா, வரதர் போன்ற மூத்தவர்களைக் கடந்தாண்டில் இயற்கையிடம் பறிகொடுத்துள்ளோம். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சாரதிகளில் மூத்தவராக விளங்கிய அதன் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களைக் கடந்த மாதம் பறிகொடுக்க நேர்ந்தது தாங்க முடியாத இழப்பாகும். தேசியத் தலைவரால் 'தேசியத்தின் குரல்' என்று அதிசிறப்பாக மதிப்பளிக்கப்பட்டுள்ள 'பாலாண்ணை'யின் மரணத்தினால் உலகத் தமிழினம் கலங்கிக் குலுங்கியதை நேரில் கண்டோம். பிரித்தானிய சாம்ராஜ்யம் சந்தித்திராத மாபெரும் இறுதி வணக்க மரியாதை இவருக்குக் கிடைத்தது. இவரது மறைவின் சோகத்திலிருந்து மீள்வதற்கு முன்னர் 'தமிழரசின் மூளை' என்று வர்ணிக்கப்பட்ட தமிழர் சுயாட்சியின் பிதாமகரைக் கனடாவில் பறிகொடுக்க நேர்ந்தது. பேச்சாலும் எழுத்தாலும் செயலாலும் தமிழர் சுயாட்சிக்கு வித்திட்டு வீரம் ஊட்டி வந்த அரசியல்ஞானி வி. நவரத்தினம் அவர்களுக்கு தமிழர் தலைமைத்துவம் 'நாட்டுப்பற்றாளர் ' பட்டம் வழங்கி மதிப்பளித்துள்ளது. இவர்கள் அனைவரது மரணங்களும் மறைவுகளும் எமது மனதுக்குள் புத்துணர்வொன்றினை ஏற்படுத்தியுள்ளது. அது, அவர்களது கனவுகளை நனவாக்குவோம் என்பதுவே. எங்கள் தலைமைத்துவம் கூறியுள்ளது போன்று இவ்வாண்டு புதிய பாய்ச்சல் கொண்ட வெற்றி ஆண்டாக வரலாற்றில் இடம்பெற, நாம் தமிழர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station 'F'
Toronto, ON. M4Y 2L4

போன் : (416) 920-9250
ஃபக்ஸ்: (416) 921-6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர்
தகவல் நிலையம்
ரொறன்ரோ
&
தமிழர் தகவல்
ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

பிரதம ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர்கள்
சசி பத்மநாதன்
விஜய் ஆனந்த்
அன்ரன் கனகசூரியர்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

பொதுமக்கள் தொடர்பு
ஆர். ஆர். ராஜ்குமார்
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்
எஸ். திருமுருகா

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாப் &
தமிழ் கிரியேட்டர்ஸ்

ஒளி அச்சு-வடிவமைப்பு
அகிலன் அசோஷியேற்ஸ்

அச்சுப்பதிப்பு
அகிலன் அசோஷியேற்ஸ்
(416) 920-9250

மாதாந்த வெளியீடு
5000 பிரதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தகவல் 16வது ஆண்டு பூர்த்தி வைபவம்

தமிழர் தகவலின் 16வது ஆண்டு பூர்த்தி வைபவம் வழக்கம் போல அடுத்த மாதம் - பெப்ரவரி 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறுவுள்ளது.

ரொறன்ரோ நகர சபையின் அங்கத்தவர் சபா பீடத்தில் (Council Chamber of the Toronto City Hall) பிற்பகல் 3:45 மணி முதல் வைபவம் நடைபெறும். விழா அழைப்பிதழ்களை பெப்ரவரி 18ம் திகதிக்குப் பத்து நாட்களுக்கு முனனர் அழைக்கப்படுபவர்கள் தபால் மூலம் பெறுவார்கள்.

இவ்வருட விருதாளர்கள் தெரிவு முற்றாகிவிட்டது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே சமூக-கலை-இலக்கியப் பணி, தொழிற்றுறைச் சேவை, மாணவர் பங்களிப்பு, சிறப்பு விருதாளர்கள் என்ற வகையில் இவ்வாண்டுக்கும் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

கனடியத் தமிழர் சுமுகத்தில் முதன்முதலாக விருதுகள் வழங்குவதை அறிமுகம் செய்தவர்கள் என்ற பெருமையுடன், அதன் மதிப்பிற்கு மேலும் மெருகூட்டும் வகையில் இவ்வருட வைபவம் ஏற்பாடாகி வருகின்றது.

பதினாறாவது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடும், விருதுகள் வழங்குவதும் இணைந்த நிகழ்ச்சியாக, இரு அமர்வுகளாக விழா நடைபெறும்.

அழைக்கப்படுபவர்கள் மட்டுமே இவ்வைபவத்தில் பங்குபற்ற முடியும். எவராவது வைபவத்தில் பார்வையாளராகப் பங்குபற்ற விரும்பினால், இந்த மாதம் 30ம் திகதிக்கு முன்னர் 416-920-9250 இலக்கத்தை அழைத்து தங்கள் பெயரையும், தொலைபேசி இலக்கத்தையும், அழைத்த நோக்கத்தையும் பதிவு செய்யலாம். தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.

# குடிவரவாளர் சேவைகளில் திருப்தி அளிக்காத இரு மட்ட அரசுகள் போக்கு

கனடிய மத்திய அரசாங்கமும், ஒன்ராறியோ மாகாண அரசாங்கமும் கனடாவுக்குப் புதிதாக வரும் அகதிகளுக்கும், குடிவரவாளர்களுக்கும் பல சேவைகளை ஆரம்பிக்கவிருப்பதாகத் தினசரி அறிவித்து வருகின்றன.

ஆனால், அகதிகளாக வந்த ஆயிரக்கணக்கானவர்கள் அகதிக் கோரிக்கை ஏற்றுப் பல வருடங்களாகியும், தமக்கான நிரந்தரக் குடியுரிமை (லான்டிங்) பெறமுடியாது திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இதனால் தமது தகுதிக்கும் அனுபவத்துக்குமான உரிய தொழிலைப் பெறமுடியாது தவிக்கின்றனர். இதன் காரணமாகச் சொறியல் வேலைகளில் தம்மை ஈடுபடுத்திக் குறைந்த ஊதியத்தைப் பெறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையிலிருக்கும் பலரின் வாழ்க்கைத் துணை (கணவர்/மனைவி) மற்றும் பிள்ளைகள் ஆகியோர் பல வருடங்களாகியும் மீண்டும் ஒன்றிணைய முடியாது வாழ்கின்றனர். குடும்பங்கள் மீளிணைவுக்குக் (Family Reunification) கனடிய மத்திய அரசு முன்னுரிமை வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் அவ்வாறாக இல்லை என்பதே உண்மை.

அகதிக் கோரிக்கையாளர்கள் தமது விசாரணைக்குக் காத்திருக்கும் காலமும் அதிகரித்துச் செல்கின்றது. மொத்தத்தில் பாரிய தேக்கநிலை (Backlog) உருவாகி வருவது அவதானிக்கப்படுகின்றது.

அரச இயந்திரம் வெகுவாகத் திட்டமிட்டே தேக்கநிலையைத் 'தயாரித்து' வருவதாக உள்நாட்டுச் சேவை நிறுவனங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. அமெரிக்கா ஊடாக வரும் அகதிகள் மீதான கெடுபிடிச் சட்டங்கள் அகதிகள் வருகையை அயிரக் கணக்கில் குறைத்துள்ளது. மறுபுறத்தில் நிராகரிப்பும் ஓங்கிச் செல்கின்றது.

வருடாந்தம் மூன்று லட்சம் வெளிநாட்டு பிரஜைகளைக் கனடாவுக்குள் அனுமதிப்பதென்ற இலக்கு, தொடர்ந்தும் பேணப்படுமென்று அரசு அறிவித்துள்ளது. இது, அகதிகள் உட்பட மற்றைய சகல வகுப்புகளையும் உள்ளடக்கிய குடிவரவாளர்களைக் கொண்டது

இவர்களுக்கான குடியமர்வுச் சேவைகள் வழங்கும் பல திட்டங்களை மத்திய அரசும், மாகாண அரசுகளும் ஒன்றுக்கொன்று போட்டியடிப்படையில் அறிவித்து வருகின்றன. இதில், ஒன்ராறியோ அரசின் தினசரி அறிக்கைகள் முக்கியமானவை.

அன்றாடம் வெளிவரும் அறிவித்தல்களின் பிரகாரம், பல மில்லியன் டாலர்கள் புதிய வருகையாளர்களின் குடியமர்வுப் பணிக்காக ஒதுக்கப்படுகின்றது. மொழிப் பயிற்சி, தொழிற் பயிற்சி, தொழிலுக்குத் தயார்பண்ணல், தொழிற் சமத்துவத்தைப் பேணல், வெளிநாட்டுத் தராதரங்களை மதிப்பீடு செய்தல், கனடிய தொழிற் சந்தைக்குகந்த பயிற்சி வழங்கல் போன்ற பல்வேறு திட்டங்கள் தற்போது அமுலிலுள்ளன.

இவைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றிய அறிவித்தல்களையே அண்மைய நாட்களில் அதிகமாகக் காண முடிகின்றது. அதிலும் சில நிறுவனங்களே கூடுதலான நிதியினைப் பெற்று வருவதையும் பலர் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

நீண்ட காலம் இங்கு வாழும் கனடியர்களுக்கு வேலை வாய்ப்புக்காக இந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி பயன்படுகின்ற அளவுக்கு, புதிய குடிவரவாளர்களுக்குத் தேவையான சேவைகள் சரிவர வழங்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகின்றது. சில நிறுவன ஆய்வுகளும் இதனை நிரூபித்து நிற்கின்றன.

இவ்வாண்டின் கனடிய மத்திய அரசின் தேர்தல், ஒன்ராறியோ மாகாணத் தேர்தல் ஆகியவற்றை நோக்கிய 'அரசியல்' செயற்பாடாக புதிய நிதி ஒதுக்கீடுகள் பலராலும் பார்க்கப்படுகிறது.

**எஸ்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சிந்தனைப் பூக்கள்'
## எஸ். பத்மநாதனின் தொடர்

# சிட்டுக்களே வாருங்கள்!

அங்கம் 9

அன்பான இளம் சிட்டுக்களே!

உங்கள் மாமாவுக்கு பலவிதமான ஆசைகள். எல்லாமே சிட்டுக்களான உங்களைப் பற்றியது தான். சிறிய வயதிலிருந்து நிறையவே வாசிப்பு பழக்கம் உள்ள மாமாவுக்கு தற்போதுள்ள சிட்டுக்கள் வாசிப்பது குறைந்து வருவது மட்டுமல்ல அவர்களுக்கு கதை சொல்லும் ஆற்றல், பேச்சாற்றல் என்பனவும் குறைந்து வருவது பற்றிய கவலை நிறையவே உள்ளது. அத்துடன் அவர்களுக்கு கதை சொல்லும் பெற்றோர்களும் குறைந்து வருகிறார்கள். கதைகளை கேட்கும் ஆவலை பெற்றோர்களே தூண்ட வேண்டும். முன்பெல்லாம் பாட்டி கதை சொல்வார், பேரப் பிள்ளைகள் கேட்டபடியே நித்திரை செய்வார்கள். இவ்வாறான நிகழ்வுகளை இப்போது காண முடிவதில்லை. அதிலும் புலம்பெயர்ந்து வந்துள்ள எமது சிட்டுக்கள் கதை கேட்பதும் குறைவு சொல்வதும் குறைவு. நகைச்சுவையாக அவர்களால் பேசவும் முடிவதில்லை. சிட்டுக்களே! உங்களுக்கு கதை சொல்ல இனிமேல் யார் வரப்போகிறார்கள். மெகா தொடர் சினிமாவில் மூழ்கியும், வேலைப் பளுவில் இருக்கும் பெற்றோர்களும் கதைகளை சொல்லி செல்லம் கொஞ்ச எப்படி நேரம் வரும்!

பல சிட்டுக்களுக்கு கதைகள் கேட்பதில் ஆர்வம் உண்டு. எனினும் அவர்களுக்கு அழகான முறையில் சொல்வதற்கு பெற்றோரால் முடிவதில்லை. ஆங்கிலத்தில் முடியாதென்றாலும் தமிழ்மொழியில் நல்ல சிறுகதைகளை வீடுகளில் ஆரம்பிக்க வேண்டும். சிட்டுக்களே நீங்கள் உங்கள் பெற்றோர்களிடம் கதைகளை கூறும்படி கேளுங்கள். உங்கள் பெற்றோர்களுக்கு திறமை இல்லை என்றாலும் விடாதீர்கள். எப்படியும் வசியப்படுத்தி கதைகளை கூற வையுங்கள். உங்கள் கற்பனை வளம், மொழித்திறன், ஞாபக சக்தி, பிரச்சனைத் தீர்வு போன்ற பல விடயங்களுக்கு இக்கதைகள் உதவலாம்.

மாமாவுக்கு இன்னுமோர் கவலை உங்களைப் பற்றியுள்ளது. நீங்கள் பத்திரிகைகளை கிரகித்து வாசிப்பதில்லை என்பது தான் அது. பத்திரிகைகளை புரிந்து கொள்ளவும், நுகரவும், ரசிக்கவும், அலசவும், கண்டிக்கவும், போற்றவும் தெரிந்து கொள்ள இது உதவுகிறது. நீங்கள் பெரியவர்களாகும் போது உங்களை அறியாமலே அறிவு விசுவரூபம் எடுத்து விடுகிறது. அப்படி வாசிக்காது நீங்கள் வளர்ந்து விட்டால் எந்த கேள்வியும் இல்லாமல், எந்த விமர்சனமும் இல்லாமல் கிடைப்பதனை நுகர்ந்து வாழும் ஒருவராகி விடுவீர்கள். உயிர்ப்பும், மனிதமும் நிறைந்த தமிழ்ச் சமூகத்திற்கு உங்கள் பங்களிப்பு நிறையவே தேவைப்படுகிறது. அறிவுத் தற்கொலை செய்யும் சமூகமொன்றில் பங்காளியாகாதீர்கள்.

அன்பான சிட்டுக்களே! நீங்கள் குடியிருக்கும் வீடுகளை அவதானித்துப் பாருங்கள். அழகு சாதனங்கள் வைக்க ஒரு அறை, விலையுயர்ந்த படுக்கைகள் வைக்க பல அறைகள், தொலைக்காட்சி சேவைக்கு ஒரு தனி அறை, சாமிப் படங்களுக்கு ஒரு அறை என்று ஒதுக்கியிருப்பார்கள். ஆனால், உங்களது படிப்புக்கு அல்லது நூல்களை அடுக்குவதற்கு அறை இருக்காது. சாப்பாட்டு மேசையில் உங்களை படிக்க கூறுவார்கள். இப்படி தொடர விடாதீர்கள். படிப்புச் சூழ்நிலையை வீட்டில் உருவாக்க முயன்று பாருங்கள். உங்களுக்குள் மறைந்திருக்கும் பரிபூரணத்தை வெளிப்படுத்துங்கள், உங்கள் செயலில் அழகினை புகுத்துங்கள்.

அன்பான சிட்டுக்களே! கலையார்வம் உள்ள மாமாக்களிடம் 'பூஞ்சிட்டுக் கதை நேரம்' என்ற பெயரில் குறுந்தட்டுக்களை வெளியிட கூறுங்கள். அதில் பிராணிகளின் குரல்களையும் ஒலிக்க வேண்டுங்கள். உங்கள் வீடுகளுக்குள் நல்ல கதைகளை வர விடுங்கள். உங்கள் கதை கேட்கும் ஆவல் இப்படியாவது பூர்த்தியாகட்டும்.

மீண்டும் சந்திப்பேன்.

# வயதானோருக்கு உதவவென துறைசார் நிபுணர்கள்

வயதானோருக்கும் உடல் வலுவிழந்தோருக்கும் (வயதாளருக்கும், உடல் இயலாளருக்கும்) உதவுவதற்கென பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களதும், தனியார் துறை மென்பொருளியலாளர்களதும் ஒன்றிணைவை அதிகரிக்கவென கனடா முழுவதற்குமான ஒரு இணைவலையமைப்பை (Network) உருவாக்கியுள்ளனர்.

The Intelligent Computational Assistive Science and Technology எனப்படும் இவ்விணைவலையமைப்பு யோர்க் பல்கலைக்கழகத்தில், அப்பல்கலைக்கழத்தினதும், வேறு தொழினுட்ப தனியார் நிறுவனம் ஒன்றினதும் ஆதரவில் ஆரம்பம் பெற்றுள்ளது.

இவ்வமைப்பில் விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், தொழில் முனைவோருடன் உடல் இயலாளருக்கு இதய சுத்தியுடன் உதவி வரும் நிறுவனங்களும் ஒன்றிணைந்துள்ளன.

தமது அறிவினையும், ஆராய்ச்சிகளையும் ஒன்றிணைத்து, இவர்களுக்கு பல்வேறு வகையிலும் தேவையான, சுற்றாடலை உணரக்கூடிய, அதன் மூலம் சுய நடமாட்டத்திற்கு உதவக்கூடிய தொழில்நுட்பத்தை உருவாக்கவும், வீட்டினுள் அவர்களின் பாதுகாப்பினை அதிகரிக்கக் கூடிய தொழில்நுட்பத்தையும் உருவாக்க முயல்வதாக யோர்க் பல்கலைக்கழக கணினித் துறை பேராசிரியர் ஜோன் சொற்சஸ் தெரிவிக்கின்றார்.

உருவாக்கத்திலுள்ள செயற்பாடுகளில் சில, தாமாகவே இயங்கக்கூடிய சக்கர நாற்காலிகள், அணியக்கூடிய இயக்கமுள்ள இயந்திரங்கள் (Robotics), வீட்டிலுள்ளவரின் தேவைகளை முன்கூட்டியே அறிந்து கொள்ளக்கூடியதும், அவர் ஆபத்தில் இருக்கின்றாரா என்பதை உணரக்கூடியதுமான கணினி மயப்படுத்தப்பட்ட வீட்டமைப்பு என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடிய கடவுச் சீட்டுக்கு காத்திருக்க வேண்டும்

அவசரமாக கனடிய கடவுச்சீட்டு தேவைப்படாதவர்களை, வசந்த காலம் வரை பொறுத்திருந்து விண்ணப்பிக்குமாறு கடவுச் சீட்டு அலுவலகம் அறிவித்துள்ளது.

கனடிய கடவுச் சீட்டு திணைக்கள அதிகாரியின் கூற்றின்படி, அமெரிக்காவிற்கு விமான மூலம் செல்வதற்கு கடவுச் சீட்டு கட்டாயம் என்னும் கடுமையான நடைமுறைகளினால் வழமையிலும் பார்க்க அதிகளவில் கடவுச் சீட்டிற்கு தேவையேற்பட்டுள்ளது.

இந்த (ஜனவரி) மாதம் 23ம் திகதியிலிருந்து அமெரிக்காவிற்கு விமான மூலம் பயணிப்பவர்கள் சட்டப்படி செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது அடிக்கடி பயணிப்பவர்கள் விசேட Nexus Air Card எனப்படும் ஆவணத்தை வைத்திருத்தல் அவசியம்.

தரைமூலம் அல்லது கப்பல் மூலம் பயணிப்பவர்கள், இப்போதைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது வாகன அனுமதிப் பத்திரத்துடன் பயணிக்கலாம்.

கனடிய கடவுச் சீட்டுக்கு 355,474 விண்ணப்பப் பத்திரங்கள் கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் வந்திருப்பதாக கனடிய கடவுச் சீட்டு நிறுவனம் தெரிவிக்கின்றது. இதனை 2005ம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 33 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## மகாஜன கலைவிழா

சில வருடங்களாகத் தடைப்பட்டிருந்த கனடா மகாஜன சங்கத்தினரின் முத்தமிழ் விழா மீண்டும் இந்த மாதம் 27ம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விழாத் தொடர்பாக ஒரு டசின் பிரமுகர்களின் (ஐவர் பெண்கள்) புகைப்படங்களுடன் வர்ணப் பிரசுரமொன்று வந்துள்ளது.
நிகழ்ச்சிகளின் 'இயக்குனர்கள் அனைவரும் மகாஜனவின் கலைஞர்கள்' என்ற குறிப்பு கவனிக்கப்பட வேண்டியது. மகாஜன வருடாந்தக் கலைவிழாவைத் தொடர்ந்து நடத்தவிடாது நிறுத்தியதாகச் சொல்லப்படும் முக்கியமானவர்கள் புதிய நிர்வாகத்தில் இல்லையென்பதால் மீண்டும் கலைவிழாவை நடத்த முடிகின்றது என்று தற்போதைய நிர்வாகிகள் கூறுகின்றனர்.

### கனடியத் தமிழர் வாழ்வு

# இந்த ஆண்டில் இரண்டு தேர்தல்கள்

கனடாவில் இப்போது ஒவ்வொரு ஆண்டும் தேர்தல் நடைபெறுவது வழக்கமாகி விட்டது. கடந்த ஆண்டின் ஜனவரியில் கனடிய மத்திய அரசுக்கான தேர்தல் நடைபெற்றது. அதில் வெற்றிபெற்ற கனசர்வேடிவ் கட்சி சிறுபான்மை அரசை அமைத்தது. ஒன்ராறியோவிலுள்ள சகல உள்ளூராட்சிச் சபைகளுக்குமான தேர்தல் கடந்த நவம்பரில் நடைபெற்றது. மார்க்கம் நகராட்சி ஊடாக இரண்டு தமிழர்கள் கனடிய அரசியலில் நுழைய இத்தேர்தல் வழிவகுத்தது.

கடந்த வருடக் கடைசியில் இன்னொரு தேர்தல் மிகவும் பரபரப்பாக நடைபெற்றது. இது, கனடிய லிபரல் கட்சியின் தலைவரைத் தெரிவதற்கான தேர்தல். பத்தாண்டுகளாக பிரதமராகவிருந்த ஜோன் கிரட்சியனிடமிருந்து கட்சியைப் பொறுப்பேற்ற போல் மாட்டின், சில மாதங்களுக்குள் அதனைப் போட்டுடைத்து விட்டார். இதனால் கடந்த வருடத் தேர்தலில் லிபரல் தோல்வி கண்டது. அதற்கான தார்மீக உரிமையை ஏற்று போல் மாட்டின் தலைமைப் பதவியிலிருந்து விலகியதால், அப்பதவி காலியானது.

கட்சியின் புதிய தலைவராக மொன்றியலைச் சேர்ந்த ஸ்டிபன் டியோன் தெரிவாகியுள்ளார். இவர் ஜோன் கிரட்சியன் அமைச்சரவையில் இருந்தவர். எனவே. கிரட்சியன் காலத்தவர்களை மீண்டும் இவரால் கொண்டுவர முடியுமென்று பலரும் நம்புகின்றனர். அதற்கேற்றாற் போல, ஸ்டீபன் ஹாப்பர் அரசைப் பதவியிலிருந்து இறக்கப்போவதாக புளொக் கியுபெக்கா கட்சியின் தலைவர் அறிவித்துள்ளார்.

பிரதான மூன்று கட்சிகளின் தலைவர்களும் விரைவில் தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர். பிரதமர் ஹாப்பரும் இதனையே கூறியுள்ளார். தேர்தலை சந்திப்பதற்குச் சாதகமான அமைச்சரவை மாற்றமொன்றை ஏற்படுத்த ஹாப்பர் முயன்று வருகின்றார். அடுத்த சில மாதங்களில், வசந்த காலத்தையொட்டியதாக பொதுத் தேர்தல் இடம்பெறலாம் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர். சகல கட்சிகளதும் நடவடிக்கைகளும் அதனையே காட்டி நிற்கின்றன.

இந்த வருடப் பிற்பகுதியில், அக்டோபர் 4ம் திகதி. ஒன்ராறியோ மாகாண சபைக்கான தேர்தலில் நடைபெறவுள்ளது. நான்காண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் இத்தேர்தல் அதன் கால நியமப்படி நடைபெறவுள்ளது. 2002ல் நடைபெற்ற தேர்தலில் ஆட்சிக்கு வந்த டால்ரன் மக்கன்ரியின் மாகாண லிபரல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுமா என்பதை உறுதியாகச் செல்ல முடியாதுள்ளது. 'கட்சியில் பிரச்சனையில்லை; தலைவரே பிரச்சனை' என்பது கட்சியிலுள்ள பலரதும் அபிப்பிராயம்.

இதற்காகவோ என்னவோ ரொறன்ரோ மத்திய தொகுதி உறுப்பினரும் சுகாதார அமைச்சருமான ஜோர்ஜ் சிமிதர்மன் மாகாண பிரதிப் பிரதமராக்கப்பட்டுள்ளார். ரொறன்ரோ பெரும்பாகத்தின் (Greater Toronto) பிரசாரம் இவரது தலைமையில் இடம்பெறுமென்று சொல்லப்படுகின்றது. ரொறன்ரோ பெரும்பாகத்தின் 44 வரையான தொகுதிகளில் அதிகூடிய தொகுதிகளைப் பெற்றால் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றலாமென டால்ரன் மக்கன்ரி தரப்பு எதிர்பார்க்கின்றது.

ரொறன்ரோ பெரும்பாகத்திலேயே (ரொறன்ரோ, மார்க்கம், மிசிசாகா, பிராம்டன், பிக்கரிங்-ஏஜக்ஸ்) கூடுதலான தமிழ் மக்கள் வசிப்பதால் இவ்வருடம் நடைபெறவுள்ள இரண்டு தேர்தல்களிலும் தமிழ் மக்கள் பிரதான பங்கு வகிக்கப் போவது தவிர்க்க முடியாததாகியுள்ளது. வாக்காளர்களாக மட்டுமன்று, ஆகக்குறைந்தது ஒன்றிரண்டு தொகுதிகளிலாவது கனடியக் கட்சிகளின் வேட்பாளர்களாக தமிழர்கள் நிறுத்தப்பட வேண்டிய நிலைமை உருவாக்கப்பட வேண்டும். இது விடயத்தில் கனடிய தமிழர் பேரவை இப்போதே கவனத்தைச் செலுத்த வேண்டியது அவசியம்.

**உக்கிரன் பார்வையில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வேலுப்பிள்ளையின் தொடர்

# காதில் விழுந்தவை

## தொடர் இல: 11

119. *அனைத்து இந்தியாவினதும் வர்த்தகச் சின்னமாக விளங்கும் மும்பையில் குண்டு வெடிப்பு* (2006-07-12). The whole of India... என்பது இங்கு *அனைத்து இந்தியா...* என்று பெயர்க்கப்பட்டுள்ளது. இந்தியா என்பது ஒருமை. அனைத்து என்பது பன்மை. ஆகவே *அனைத்து இந்தியாவினதும்* என்பது பொருந்தாது. **முழு இந்தியாவினதும்**... அல்லது **இந்தியா முழுவதினதும்**... என்று குறிப்பிடலாமே! எங்கெல்லாம் பொருந்துமோ அங்கெல்லாம் **இந்திய மாநிலங்கள் அனைத்தும்**.. அல்லது **அனைத்து இந்திய மாநிலங்களும்**... என்று குறிப்பிடலாமே!

120. *பாலஸ்தீனம், லெபனான் மீது இஸ்ரவேல் மேற்கொண்ட தாக்குதல்கள் அளவுக்கு மீறியவை* (2006-07-13). Excessive என்பது *அளவுக்கு மீறியவை* என்று பெயர்க்கப்பட்டிருக்கலாம். **மட்டுமீறியவை** என்பதே சிறப்பு.

121. *வட கொறியாவுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் அற்றுக் காணப்படுகின்றன* (2006-07-13). அவ்வளவு தூரம் இடர்ப்பட வேண்டியதில்லை. *பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் அடையவில்லை* அல்லது **பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை** என்று எளிதாகவும் இயல்பாகவும் சரியாகவும் குறிப்பிடலாமே!

122. *லெபனானில் நடைபெறும் விடயங்கள்* (2006-07-14). *நடைபெறும் விடயங்கள்* என்பதை விட லெபனானில் **இடம்பெறும் நிகழ்வுகள்** அல்லது **இடம்பெறுபவை** அல்லது **நிகழ்பவை** என்பதே சிறப்பு.

123. *செவ்வாய்க் கிழமை நடைபெற்ற மும்பைக் குண்டுத் தாக்குதல்கள்* (2006-07-16). Tuesday's Mumbai bombings. *மும்பைக் குண்டுத் தாக்குதல்கள்* என்பது ஒரு செய்தித் தலைப்புக்குப் பொருந்தும். ***மும்பையில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்கள்*** என்பது வசனத்துக்குப் பொருந்தும்.

124. *சிறிய எண்ணிக்கையிலான இஸ்ரேலிய தரைப் படையினர் தெற்கு லெபனான் பகுதிக்குள் நுழைந்தனர்* (2006-07-17). A small number of Israeli soldiers entered southern Lebanon. **இஸ்ரேலிய தரைப் படையினர் சிலர்...**

125. *லெபனானில் மதிப்பீடு செய்யப்பட்ட 80,000 இலங்கையர்கள் இருக்கிறார்கள்* (2006-07-17). An estimated 80,000 Sri Lankans are in Lebanon. **லெபனானில் 80,000 இலங்கையர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.**

126. *லெபனானில் உயிரிழப்புகளும் உடைமைகளின் சேதங்களும் அதீதமாக அதிகரித்து வருகின்றன* (2006-07-17). உடைமைகளுக்கு விளைபவையே சேதங்கள். ஆகவே உயிரிழப்புகளும் சேதங்களும் அதிகரித்து வருகின்றன என்றே குறிப்பிடலாம். இவை *அதீதமாக அதிகரித்து வருகின்றனவாம்!* **பெருகி வருகின்றன** என்று குறிப்பிடலாமே! வேண்டுமானால், **பல்கிப் பெருகி வருகின்றன** என்றும் குறிப்பிடலாமே!

127. *இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தம்மைப் பாதுகாப்பதற்கு அரபு மக்கள் ஹமாஸ், ஹெஸ்புல்லா இயக்கங்களை நம்பியிருக்கிறார்கள்* (2006-07-17). ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தம்மைப் பாதுகாப்பதற்கு... என்பது பொருந்தாது. **ஆக்கிரமிப்பிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கு...**

128. *வாழ்க்கையின் பெறுமதிகளை அறியாத கொடூர பயங்கரவாதத்துக்கு இடம் அளிக்கக் கூடாது என்று பிரதமர் விக்கிரமநாயக்கா கேட்டுக் கொண்டுள்ளார்* (2006-07-18). Life's values என்பது இங்கு *வாழ்க்கையின் பெறுமதிகள்* என்று பெயர்க்கப்பட்டிருக்கலாம். Value என்பது ஒரு *பண்டத்தின் பெறுமதி* என்றோ, ஒரு வாழ்வின் *விழுமியம்* என்றோ... பொருள்பட வல்லது. வாழ்வு எத்தகையது என்னும் ஆய்வுக்குள் இங்கு நாம் இறங்க வேண்டியதில்லை. எனினும் வாழ்வு ஒரு பண்டம் அல்ல என்பது மட்டும் உறுதி. எனவே Life's values என்பது **வாழ்வின் விழுமியங்கள்** என்றே பொருள்படும். கதையோடு கதையாக, வாழ்வின் விழுமியங்களை அறியாத கொடூர அரச பயங்கரவாதத்துக்கு மட்டும் நாம் இடமளிக்கலாம் போலும்!

129. *உடப்பில் மினி இராணுவ முகாம்* (2006-07-21). A mini millitary camp in Udappu. இதன் செவ்விய தமிழாக்கம்: **உடப்பில் குறும் படை முகாம்.**

130. *இந்தியா ரணிலிடம் வற்புறுத்தலைத் தெரிவித்துள்ளது* (2006-07-21). இந்தியா ரணிலிடம் வற்புறுத்தியுள்ளது அல்லது வற்புறுத்திக் கூறியுள்ளது என்று தமிழ்ப்படுத்தலாமே!

131. *இனப் பிரச்சனையைத் தீர்க்கத் தூர நோக்கம் தேவை என்று இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்* (2006-07-22). Vision என்பது காட்சி, பார்வை, தொலைநோக்கு, அகநோக்கு... என்றெல்லாம் பொருள்பட வல்லது. இனப் பிரச்சனையைத் தீர்க்கத் தொலைநோக்குத் தேவை... என்றே அவர் தெரிவித்துள்ளார்.

132. *விடுதலைப் புலிச் சந்தேக நபருக்கு உதவியதாகத் தெகிவளைக் கிராமசேவகர் கைது* (2006-07-22). An LTTE suspect அல்லது A suspected Tiger என்பது ஆங்கிலப் பாணி. விடுதலைப் புலி என்று சந்தேகிக்கப்படுபவர் என்பது தமிழ்ப் பாணி:

| **தமிழ்** | **வடமொழிக் கலப்பு** |
|---|---|
| ஐயுறு | சந்தேகி |
| ஐயுறவு | சந்தேகம் |
| ஐயுறவுப் பேர்வழி | சந்தேகப் பேர்வழி |
| ஐயுறுபவர் | சந்தேகிப்பவர் |
| ஐயுறப்படுபவர் | சந்தேகிக்கப்படுபவர் |
| ஐயுறப்படுபவருக்கு | சந்தேகிக்கப்படுபவருக்கு |

விடுதலைப் புலி என்று ஐயுறப்படுபவருக்கு உதவியதாகத் தெகிவளைக் கிராம சேவகர் கைது.

133. *புலிகளின் நிலை மாறாவிட்டால், ஐரோப்பிய ஒன்றியக் கண் காணிப்பாளர்கள் வெளியேறுவார்கள்* (2006-07-23). EU monitors will leave if the Tigers' position does not change. புலிகளின் நிலைப்பாடு மாறாவிட்டால்... "நிலை, நிலைமை, நிலைவரம், நிலைப்பாடு" என்பவற்றிடையே பொதிந்துள்ள நுண்ணிய வேறுபாட்டையும், சொற்பிறப்பியலையும் நாம் ஏற்கனவே சுட்டக் காட்டியுள்ளோம். சொற்பிறப்பியலைப் பொருட்படுத்தாத தமிழ்நாட்டு ஊடகங்களை அடியொற்றி ஈழநாட்டு, வெளிநாட்டுத் தமிழ் ஊடகங்கள் பலவும் நிலைவரம் என்னும் அரிய சொல்லை நிலவரம் என்று எழுத்துக்கூட்டி வருகின்றன. வெகு விரைவில் நிலய், நிலமை, நிலப்பாடு போன்றவற்றையும் நாம் எதிர்கொள்ள நேரும்!

மார்ச் இதழில் மேலும் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் பிறந்தது

ஐந்து மாத இடைவெளிக்குப் பின்பு முகம் தெரிந்த ஒரு சில நேயர்களையும், முகம் தெரியாத பல்லாயிரக் கணக்கான வாசகர்களையும் தகவல் ஊடாகத் திரும்பவும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். வாழ்க்கையில் இன்பமான, துன்பமான, கசப்பான, பரபரப்பான எந்த ஒரு அனுபவமும் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்கிறது. ஐந்து மாதங்களுக்கு முன்பு எனக்கு நடைபெற்ற முழங்கால் மாற்று அறுவைச் சிகிச்சை பலவிதமான அனுபவங்களையும், உணர்வுகளையுமே எனக்கு ஏற்படுத்தியது. மொத்தத்தில் ஆஸ்பத்திரி வாழ்க்கை எனக்கு ஒரு கற்றல் அனுபவமாகவே அமைந்தது.

வாழ்க்கையில் இரு சுகப்பிரசவங்களுக்காகவே ஆஸ்பத்திரியில் தங்கிய எனக்கு இது மூன்றாவது ஆஸ்பத்திரியில் தங்கும் அனுபவம். சத்திரசிகிச்சையைப் பொறுத்தமட்டில் இதுவே எனது முதல் அனுபவம். ஆகவே மனதில் பயமும், பதட்டமும் ஏற்படத்தான் செய்தன. பொதுவாகக் கனடாவில் ஒரு கூற்று உண்டு - "It is just a walk in the park" - அதாவது பூங்காவில் நடப்பதற்குச் சமம் என்பதாகும். எனக்குத் தெரிந்த பலரும் இச் சத்திர சிகிச்சை பற்றி இவ்வாறுதான் கூறினார்கள். இதன் பின்பு ஏற்பட்ட மனத்துணிவே என்னைச் சத்திர சிகிச்சைக்கு உடன்பட வைத்தது. ஆயினும் ஒவ்வொருவரின் உடம்புவாசிக்கு ஏற்ப அனுபவங்களும், பாதிப்புகளும் வேறுபடும். ஒரேவிதமான சத்திர சிகிச்சையை ஒரே வைத்திய நிபுணர் செய்தாலும் ஆளுக்காள் அதன் வெற்றி வீதத்திலும், சுகம் ஏற்படும் வேகத்திலும் வேறுபாடு காணப்படத்தான் செய்கிறது.

"நோயாளி விதியாளி என்றால் பரியாரி பேராளி" என்பது எம் நாட்டு கூற்று. எனக்குச் சத்திர சிகிச்சை நடைபெற்ற அதே நாளில், எனது வைத்தியராலேயே அறுவைச் சிகிச்சை நடைபெற்ற ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான வெற்றி வீதம் (Success rate). பொதுவாக இந்த நோயாளிகளை நான்கு நாட்கள் தான் ஆஸ்பத்திரியில் வைத்திருப்பார்கள். பின்பு வீட்டிலிருந்தே Physiotherapy இற்கு வரவேண்டும். சிலரை 4 நாட்களின் பின்பு மேலும் 3 நாட்கள் ஆஸ்பத்திரியில் வேறு ஒரு பகுதிக்கு அனுப்பி Physiotherapy இற்கு விடுவார்கள். இதன் பின்பும் சுகம் தெரியாவிட்டால் ஒரு புனருத்தாரண ஆஸ்பத்திரிக்கு (Rehabilitation Centre) அனுப்புவார்கள். ஒரு வயோதிப மாது 4ம் நாளே எங்களுக்கெல்லாம் "Bye" சொல்லிவிட்டு walker ஐ பிடித்துக் கொண்டு வீட்டை போனா. வேறு ஒரு பெண்மணி 7ம் நாள் தடியை ஊன்றி நடந்தபடி எனக்கு பிரியாவிடை சொன்னா. ஆனால் 7 நாட்களின் பின்பும் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் காணப்படாததால் என்னை St. John's Rehabilitation Centre க்கு இரண்டு கிழமைகள் அனுப்பி வைத்தார்கள். இந்த இரண்டு கிழமைகள் முடிந்த பின்பு, வீட்டிற்கு வந்தேன். ஆனாலும் ஸ்காபரோ கிரேஸ் ஆஸ்பத்திரிக்கு மேலும் சில நாட்கள் Physiotherapy Clinic க்கு சென்றேன். அங்கு இச் சத்திர சிகிச்சை செய்த பலரைக் காணும் வாய்ப்பு ஏற்பட்டது.

ஒவ்வொருத்தருக்கும் சிறு பிரச்சனைகள். ஒரு சிலருக்கு அறுவைச் சிகிச்சையின் பின்பு பல சிக்கல்கள். அதிலும் ஒரு வெள்ளை இனப் பெண்மணி தனக்கு திரும்பவும் சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளதாகக் கூறினா. ஆகவே முன்பு கூறியது போல் ஒரே நோய், ஒரே வைத்தியம், ஆனால் பலன் வேறாக அமையும் வாய்ப்பு உண்டு.

St. Johns ஆஸ்பத்திரியில் இருப்பது ஒரு தனி அனுபவம். ஒரு சுகமான, சந்தோஷமான அனுபவமும் கூட. 65 நோயாளிகளையே இங்கு அனுமதிக்கிறார்கள். ஒவ்வொரு நோயாளியிடமும் தனிப்பட்ட அக்கறை காட்டப்படுகிறது (Intensive Therapy). சாப்பாடு ஏதோ ஐந்து நட்சத்திர ஹோட்டல் சாப்பாடு போல் இருந்தது. என்னைப் போல் சத்திர சிகிச்சைக்குப் பின்பு Physiotheraphyக்கு வந்தவர்கள் ஒரு 4 அல்லது 5 பேர்தான் இருப்பார்கள். மிகுதி நோயாளிகள் எல்லோரும் கார் விபத்தில் அகப்பட்டவர்கள். பெரும்பான்மையோர் 18, 20 வயது மதிக்கத்தக்க

ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் "இளம் கன்று பயம் அறியாது" என்பது இவர்களைப் பொறுத்தமட்டில் முற்றிலும் உண்மை. Physiotherapy Clinic இல் நோயின் தாக்கத்தினால் குளறிச் சத்தம் போடும் இப் பிள்ளைகள் மாலை நேரத்தில் தங்கள் சக்கர நாற்காலிகளில் நன்றாக உடுத்தி சந்தோஷமாக ஆஸ்பத்திரிக்கு உள்ளேயும், வெளியேயும் உலா வருவதைக் காணலாம். இவ்வளவு வருத்தத்தோடும் எவ்வாறு இவர்களால் இப்படிச் சந்தோஷமாக இருக்க முடிகிறது என நான் நினைப்பதுண்டு. இங்கு தான் நாங்கள் இந்நாட்டு மக்களின் மனப்பான்மையை மெச்ச வேண்டியிருக்கிறது. ஒரு சிறு வருத்தத்திற்குக் கூட உலகமே கவிழ்ந்து போய்விட்டது என நினைக்கும் நாம் எங்கே இவர்கள் எங்கே. எந்த நேரமும் சந்தோஷமாகவும், இன்முகத்தோடும், "I am fine" என்று கூறும் இவர்களின் மனநிலையை (Positive Approach) நாமும் வளர்த்துக் கொள்ளப் பழக வேண்டும். அப்படிச் செய்யும் பொழுது மனதில் விரக்தியும், கவலையும் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

**கனகேஸ்வரி நடராஜா**
Teacher
Earl Haig Secondary School

எங்கள் நாட்டில் அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சைக்காக ஒருவரை அனுமதித்தால் அங்கு வேலை செய்யும் ஒரு சிற்றூழிரையாவது எமக்குத் தெரிந்தால் தான் சலுகைகளைப் பெற முடியும் அல்லது சதா எமது வார்ட்டில் வேலை செய்பவரின் கைகளில் 'பசை' பூசவேண்டும். இல்லாவிட்டால் அதோ கதிதான். ஆனால் இந்நாட்டில் நிலமை எதிர்மாறானது. ஆங்கில அறிவு இல்லாவிட்டால் என்ன, வசதி குறைந்தவராக இருந்தால் என்ன இங்குள்ள ஊழியர்கள் காட்டும் அன்புக்கும் அக்கறைக்கும் அளவேயில்லை. சாப்பாடு எப்பொழுதும் குறிப்பிட்ட ஒரு நேரத்திற்கு வரும் என நம்பிக்கையோடு காத்திருக்கலாம். அதனைக் கொண்டு வந்து இன்முகத்துடன் "Enjoy" என்று சொல்லி மேசையில் வைத்துவிட்டு, தேவையென்றால் உணவை கையாளவும் உதவி செய்வார்கள். இதனை செய்யும் அத்தனை பேரும் பாடசாலை மாணவ மாணவிகள். தொண்டர் சேவையாகவே செய்கிறார்கள்.

எனது சினேகிதி ஒருவர் தான் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த பொழுது, சாப்பாடு வரும் நேரத்தில் நித்திரையாக இருந்தால் தனது கட்டிலை சாப்பாட்டு வண்டிலால் இடித்துத் தான் தன்னை எழுப்புவார்களாம் என கூறுவார். Physiotherapy Clinic இல் எங்களால் இயலாதென்றாலும் கஷ்டப்படாமல் பயன் அடைய முடியாது (No gain without pain) என கெஞ்சுவார்கள். அவர்கள் எமக்காக எடுக்கும் சிரத்தையை பார்க்கும் போது மறுப்புச் சொல்ல முடியாது. அதிலும் எனது Physiotheraphist நிறைமாதக் கர்ப்பிணி. ஒரு நிமிடம் கூட அவர் ஒரு இடத்தில் இருந்ததை நான் காணவில்லை. 'செய்யும் தொழிலே தெய்வம்" என்ற இந்நாட்டுக்காரர்களின் மனப்பாங்கே இங்கு ஒவ்வொரு ஆஸ்பத்திரியும் கோவில் போலும், ஒவ்வொரு ஊழியரும் தெய்வங்கள் போலும் விளங்குவதற்குக் காரணமாகும்.
இன்று இந்துசமயம் பற்றிய அறிவினைப் பெறுவதில் (மறுஒக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கவிஞர் கந்தவனம் தரும்

# கனடிய காட்சிகள்

## இடக்கரும் அடக்கரும்

1. கனடாவில் ஒரு மிருதங்கக் கச்சேரி. பிரதம விருந்தினராக வந்த இந்திய வித்துவான் ஒருவர் இடையிடையே பேஷ் பேஷ் என்று சொல்லிக் கொண்டிருந்தார். அவர் இருந்த வரிசையில் நான்கு இருக்கைகள் தள்ளி நான். இடைவேளையின் போது அவரைத் தாண்டி நான் செல்கையில் அவரது காலடியில் purse ஒன்று விழுந்து கிடந்தது. 'ஐயா இது உங்களுடையதா என்று கேட்டு எடுத்துக் கொடுத்தேன். பேஷ் பேஷ் என்ற இரசனையில் அவர் தன்னுடைய பேர்சை மறந்துவிட்டது எனக்கு நல்ல இரசனையாக இருந்தது.

2. மற்றுமொரு கச்சேரியிலே ஓர் அம்மையார் (அவரும் இந்தியர் போலும்) தனது மகனுக்கு அச்சா அச்சா என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். எனக்குப் பக்கத்திலிருந்த நண்பர் ஒருவர் 'அவர் அச்சாறு அதிகம் பாவிப்பவர் போல் இருக்கு' என்றார். அவருக்குப் பகடியாக நான சொன்னது இது: 'ஒருவர் தொலைபேசியில் ஓம் ஓம் என்று அடிக்கடி சொன்னால் அவர் OMO சவர்க்காரப் பெட்டி விற்கிறவர் என்று சொல்லுவீர் போல இருக்கு.'

3. எனக்கு ஒரு அழைப்பு வந்தது. அழைப்பிதழில் கனகரட்ணம் என்று இருந்தது. இந்த 'ரட்ணம்' என்பது இரத்தினம் என்பதன் திரிபு. கனகரத்தினம் என்ற பெயர் ஆங்கிலத்தில் Kanagaratnam என்று எழுதப்பட்டு பின்னர் அதன் தமிழ் வடிவத்தைக் கைவிட்டு ஆங்கில உச்சரிப்பையே கனகரட்ணம் என்று எழுதி வருகிறார்கள். இப்படியே செல்வரட்ணம், தவரட்ணம், நவரட்ணம் போன்ற பெயர்களும் பவனி வருகின்றன. எனது பெயரும் ஆங்கிலத்தில் Kandavanam என்றுதான் இருக்கு. ஆனால் நான் காண்டாவனம் என்று எழுதுவதில்லை.

4. தமிழ்நாட்டில் ஆங்கில வடிவங்கள் பல பச்சைத் தமிழாக்கம் பெற்றுள்ளன. சில உதாரணங்கள்: St. Cuthbert's - செங்கல்பட்டு, Hampton Bridge - அம்பட்டன் பாலம். அம்பட்டன் பாலம் பின்னர் Barber's Bridge ஆக மொழிபெயர்க்கப்பட்ட போது பாலத்தைக் கட்டிய பொறியியல் நிபுணர் Hampton மறக்கப்பட்டார். இப்பொழுது பாலத்துக்கு திரு.வி.க. பாலம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

5. தமிழ் நாட்டு அகராதி ஒன்றில் பாசு என்ற சொல் ஒன்று இடம்பெற்றிருக்கின்றது. இதற்குக் கடந்து செல்லுதல், பரீட்சையில் சித்தியடைதல் என்ற அர்த்தத்தில் பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலச் சொல் Pass பாசு ஆகியிருக்கிறது. இதனைக் கடந்த ஆண்டு நவம்பரில் சென்னைப் பல்கலைக்கழகத்து அகராதிப் பிரிவு ஆய்வாளர் ஒருவருக்குச் சுட்டிக் காட்டியபோது அவருக்கும் அது வியப்பாக இருந்தது.

6. அண்மையில் அதிபர் பொ.கனகசபாபதியும் நானும் ஒரு கூட்டத்துக்குச் சென்றிருந்தோம். அவர் கையில் ஒரு பை இருந்தது. சாப்பிடும் பொழுது பை அவர் கையைவிட்டு நழுவிவிட்டது. பை எங்கே பை எங்கே என்று தேடிக் கண்டு கொண்டார். இரண்டு பேரும் ஒரு வண்டியிலேயே வீட்டுக்கு வந்தோம். நான்தான் முதலில் இறங்க வேண்டி வந்தது. இறங்குகையில் அதிபருக்கு 'பை பை' என்றேன். அவரும் பை பை சொன்னார். அப்பொழுது 'பையா, நான் உமக்குக் குட் பை சொல்லவில்லை. உமது பையைக் கவன-மாக வைத்திரும் என்று ஞாபகப்படுத்தினேன்' அன்று சொல்லி இறங்கினேன்.

7. வானொலியில் ஒரு பெண்மணி என்னை வாழ்த்த வந்தார். தொடர்ந்த உரையாடல் இது;
அவர்: ஐயா! கவிதையால் உங்களை வாழ்த்த வந்திருக்கிறேன். பிழை இருந்தால் மன்னியுங்கோ!
நான்: அம்மா, ஒருவர் ஆயிரம் டாலர் நன்கொடை கொடுத்தால் வாங்கிக் கொண்டு அதில் கள்ள நோட்டு இருக்குமோ என்று எவருமே அவருக்கு முன்னாலேயே தேடுவதில்லை. பிழை சரியைப் பிறகு பார்ப்போம் முதலில் வாழ்த்துங்கோ! நன்றியுணர்வோடு கேட்கிறேன்.

## ஞானம் பிறந்தது........

மேற்கத்திய இனத்தவர்கள் மிகவும் அக்கறை காட்டுகிறார்கள். ஒரு சில தாதிகள் இன்னொரு இந்துசமயம் பற்றி அளவளாவுவார்கள். ஒரு தாதி பரமஹம்ச யோகானந்தரின் பக்தை. வருடத்தில் ஒரு முறையாவது கலிபோர்னியாவில் உள்ள அவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று இரு வாரங்களைக் கழிப்பாவாம். ஒரு நாள் வந்து மிகவும் பணிவாக "எனது ஓய்வு நேரத்தில் உன்னோடு வந்து இந்து சமயம் பற்றி அளவளாவினால் உனக்கு இடைஞ்சலாக இருக்காதா" எனக் கேட்டா. எனக்கு இந்து சமயம் பற்றி பெரிதாக அறியவில்லை, ஆனாலும் அவ்வாறு அவ வந்தால் எனது பொழுதும் சந்தோஷமாகக் கழியும் என்று சொன்னேன்.

ஒவ்வொரு நாளும் தவறாது தனது ஓய்வு நேரத்துக்கு வந்து விடுவா. சுவாமி யோகானந்தா பற்றிய Autobiography of a yogi ஐ எம்மில் பலரும் வாசித்திருப்பார்கள். அதனை அவ "கரைத்து குடிக்காத" குறை. அக்குவேறு, ஆணிவேறாக அதுபற்றி என்னோடு அலசி ஆராய்ந்தா. திடீர் என ஒரு நாள் - "உனக்குத் தெரியுமா இரண்டுவிதமான உயில்கள் உள்ளன. ஒன்று சொத்து சம்பந்தமானது, மற்றையது எமது உடல் பற்றியது. நான் இரண்டும் செய்துவிட்டேன்; நீயும் கட்டாயம் அவற்றைச் செய்" என்றா. அதாவது சொத்து சம்பந்தமானது எல்லோருக்கும் தெரிந்ததே. உடல் சம்பந்தமானது எமக்கு ஒரு மாறாத நோய் ஏற்படும் பொழுது (Terminal Illness) ஒருவிதமான குழாய்களையும் பொருத்தி எமது ஆயுளை நீடிக்காது எம்மை இறைவனடி சேர வரும்படி கேட்பதேயாகும். அப்படி வாழ்க்கையை நீடிப்பதால் என்ன பிரயோசனம் என்று கேட்டா. முற்றிலும் உண்மையான கூற்று என ஆமோதித்தேன். மொத்தத்தில் இந்துசமயம் பற்றி அவவிடமிருந்து நான் கற்றது தான் அதிகம். எத்தனையோ வேலைப் பட்டறைகள், எத்தனையோ புத்தகங்கள், பிரசன்னங்கள், என்று இதே வேலையாகத் திரிந்து தனது அறிவை விருத்தி செய்துள்ளா. இந்துக்கள் தமது சமயத்தால் அடையாத தன்மையை இன்று பிற இனத்தவர்கள் அனுபவிக்கிறார்கள்.

நோய், துன்பம் வரும் பொழுதுதான் எமக்கு மற்றவர்களின் அன்பும், ஆதரவும் தேவைப்படுகின்றன. சத்திர சிகிச்சை செய்வதாக முடிவு எடுத்தவுடன் ஏற்கனவே இதனைச் செய்த ஒரு சிலரைத் தொடர்பு கொண்டு (Network) ஒரு வலைப்பின்னலை ஏற்படுத்திக் கொண்டேன். எமது சமூகத்தைச் சார்ந்தவர்கள் இருவர், எனது அயலில் இருக்கும் ஒரு வெள்ளை இனப் பெண்மணி, ஒரு கறுப்பு இனத்தைச் சார்ந்த இளைப்பாறிய தாதி ஒருவர் - இவர்கள் எல்லோரும் இற்றை வரை என்னைத் தொலைபேசியில் அழைத்து சுகம் விசாரித்தபடி தான் இருக்கிறார்கள். சத்திர சிகிச்சைக்கு முதல் நாள் எனது பிள்ளைகள், மருமகள் அமெரிக்காவில் இருந்து வந்து விட்டார்கள், இவர்களும் எனது கணவரும் புடைசூழத்தான் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். இது மனதுக்கு ஒரு ஆறுதலைக் கொடுத்தது. எத்தனையோ உறவினர்களும், நண்பர்களும் சாப்பாடு, வீட்டுவேலை, கடைக்குப் போதல் எனப் பல விடயங்களில் போட்டி போட்டு உதவினார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது உலகில் 95% மக்கள் மிகவும் நல்லவர்கள், ஒரு 5% மக்களே மனதில் ஈரமில்லாதவர்கள். ஆனால் நாங்களோ எங்கள் நேரத்தின் 95% இந்த 5% மக்களைப் பற்றி யோசித்து கவலைப்படுவதிலேயே கழிக்கிறோம். எம்மைச் சுற்றி எவ்வளவு நல்லவர்கள் இருக்கிறார்கள் என்பதை இச் சத்திர சிகிச்சை எனக்கு உணர்த்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்காலத்தில் கம்பளி பாதுகாப்பு

கம்பளியை விரும்புவதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆயினும், அழுக்காவதைத் தடுக்கும் தன்மையுள்ள, சுருங்கும் தன்மை குறைந்த கம்பளியைப் பாதுகாப்பதன் அவசியம் கருதி சில முன்யோசனைகள்:-

* ஒவ்வொரு தடவை அணிந்த பின்னும், சட்டைப் பைகளை வெறுமையாக்குங்கள்.
* தூரிகை கொண்டு மண் போன்றவற்றை அகற்றுங்கள்.
* கறைகள் படியின், குளிர் நீர் கொண்டு கழுவியபின், சுத்தமான உலர்ந்த துணியினால் ஒற்றி எடுங்கள்.
* ஏதாவது மணத்தை உறிஞ்சி/உள்வாங்கி வைத்திருந்தால் அதனை வெளியேற்றுவதற்காக, உடை தாங்கிகளில் போடுவதற்கு முன்னர், ஒரு மணி நேரம் கட்டில் மேல் காற்றாட கிடையாகப் பரத்தி போட்டு வையுங்கள்.
* நெய்யப்பட்ட கம்பளி ஆடைகளை போதியளவு இடைவெளி விட்டு, உடைதாங்கிகளில் போடுவதனால் சுருக்கங்கள் இருப்பின், தளர்வதற்கு வசதியாக இருக்கும். பின்னப்பட்ட கம்பளி ஆடைகளை தொங்க விடுதல் கூடாது, ஈய்ந்து போக வாய்ப்பாகி விடும்.
* சவர்க்காரம், நீர் கொண்டு கழுவினால், ஒருபொழுதும் சூட்டின் மூலம் காய வைக்காதீர்கள், ஏனெனில் சுருங்கி விடும். கிடையாகப் பரத்தி காய விடுங்கள்.
* உலர் தூய்மை முறையை (Dry-clean) குறைவாகப் பாவியுங்கள். ஒவ்வொரு குளிர்கால முடிவிலும் செய்தல் போதுமானது.
* நீண்ட காலம் மடித்து வைக்கும் போது, பூச்சி உருண்டைகள், வாசனைப் பொருட்களை போட்டு மடித்து வையுங்கள்.
* பயணத்தின் போது, இடையிடையே 'ரிஷ்யூ' கடதாசி வைத்து, தளர்வாக உருட்டி அல்லது மடித்தால் சுருக்கம் பெரிதளவில் வர வாய்ப்பில்லை. எனினும், நீராவி கொண்ட குளியலறையில் சிறிது நேரம் வைத்திருத்தல் அதனை நீக்க உதவும்.

குயின்ரஸ் துரைசிங்கம் எழுதும்

# காக்க காக்க கணினி காக்க...!

பாகம்-9

ஓய்வு பெறுவனவும் ஓடி வருவனவும்:

கணினி உலகைப் போன்று வேறெந்த உலகிலும் அத்தனை வேகமாக தொழில்நுட்பம் வளர்ச்சியடைவதையோ மாற்றமடைவதையோ புதியன உள்வாங்கப்படுதலையோ அவதானிப்பதென்பது சற்று சந்தேகத்திற்கு உரியதுதான்.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர், கணினி உலகின் விந்தை என்றும் அதிசயம் என்றும் போற்றிக் கொண்டாடிய சாதனங்களெல்லாம், இப்போது காலாவதியாகிவிட்ட "அந்தக்கால" அல்லது "பழைய" தொழில்நுட்பங்களாகி விட்டன. வன்பொருட்களின் வரவுக்கேற்ப, அந்தந்த நிறுவனங்கள் தங்களது மென்பொருட்களிலும் பல்வேறு மாற்றங்களைச் செய்து, புதிய யுக்திகள் செய்முறைகள் அலங்காரங்களுடன் நவீன தொகுதிகளை (versions) வெளியிட்டபடி உள்ளன. பங்குச் சந்தையில் மிக அதிகபட்ச வளர்ச்சியைப் பதிவுசெய்யும் நிறுவனங்களாக இந்த வகை வர்த்தக நிறுவனங்கள் நிதி வரவில் கிளைவிட்டு வளர்ந்து செல்கின்றன.

இந்த நவீன யுகத்தில், கைக்கடிகாரத்திலிருந்து கைத்துப்பாக்கி வரை, அனைத்திலும் மிகக்குறுகிய இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் புகுத்தி விடுகிறார்கள். சின்னஞ்சிறு கணினியொன்று, செல்லமாய் உட்கார்ந்து, எந்தவொரு பிஞ்சுப் பொருளையும் இயக்கும் காலமாக தற்போதைய தினசரி உலகம் நகர்ந்து செல்கிறது.

சில வருடங்களுக்கு முன்னரெல்லாம், கணினியில் ஏதாவது சிக்கல்கள் எழுந்தால், அதற்கான காரணத்தைக் கண்டறிந்து, அதற்கு மாற்றீடாக குறிப்பிட்ட பாகத்தை அல்லது பொருளை மீளப் பொருத்தி விடுவார்கள். தற்போதெல்லாம், ஒரு நிறுவனத்திலுள்ள கணினியில் குழப்பம் வந்தால், கணினியை அப்படியே மாற்றி விடுகிறார்கள். பழைய கணினியை எக்காரணம் கொண்டும் திருத்துவதற்கு முயற்சி செய்வது மிகவும் அரிதாகிவிட்டது.

இப்போதெல்லாம் சிறியவர்களும் முதியவர்களும் கூட, மின்னஞ்சல் (ஈமெயில்) முகவரி வைத்திருப்பது காலத்தின் கட்டாயமாகி விட்டது. மின்னஞ்சல் வைத்திருந்தால் தான், சொந்தப் பிள்ளைகளுடன் கூட தொடர்பு கொள்ள முடிகிறது என்றாகிவிட்டது இன்றைய உலகம். கடிதம் எழுதுவது என்பதெல்லாம் "அந்தக்கால" பழக்கவழக்கத்தில் இருந்ததாக புத்தகத்தில் வாசித்த காலமும் மலையேறி, தொலைபேசியில் அழைத்து உரையாடும் வழக்கம் கூட, கிட்டத்தட்ட "பழைய" கால பண்பாடாக உருமாற்றம் பெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போதெல்லாம், மின்னஞ்சல், எஸ்.எம்.எஸ்., தகவலனுப்பி (text messaging) என்பன தான், தற்கால தகவல் தொடர்பூடகங்களாக பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு வீட்டின் மேல்மாடியிலுள்ள கணினியில் பொருத்தப்பட்ட Game Cube இல் விளையாடிக் கொண்டிருக்கின்றான் மகன். வீட்டின் நடுக் கூடத்தில் தந்தை உட்கார்ந்து தனது கணினியில் வலைகளை மேய்கிறார். நிலக்கீழ் அறையில் மகள் உடற்பயிற்சி செய்கிறாள். சமையலறையில் (kitchen) தாயார் காய்கறி நறுக்குகிறார். தாயின் கைத்தொலைபேசி சிணுங்குகிறது. எடுத்துப் பார்க்கிறார். உணவு தயாரா என்று கேட்கிறது அது. தகவல் அனுப்பியது மேல்மாடியில் விளையாடிக் கொண்டிருக்கும் மகன். ஆமாம், அக்காவையும் அழைத்துக் கொண்டு வா என்று தகவலாக பதில் அனுப்புகிறார் தாயார். நிலக்கீழ் அறையில் மகளின் iPod அழுகிறது. தம்பியின் தகவல். அம்மா சாப்பிட வரட்டாம் என்கிறது அது. தந்தையின் கணினியில் தகவல் கட்டம் ஒன்று ஓடி வருகிறது. செல்ல மகள், தந்தையையும் சாப்பிட வரும்படி செல்லமாக எஸ்.எம்.எஸ். அனுப்பியிருக்கிறாள். அனைவரும் சமையல்கட்டில் சந்திக்கின்றனர். இருந்த இடத்திலிருந்து குரல் கொடுத்திருக்கலாம், மேலேயோ கீழேயோ போய் அழைத்திருக்கலாம், தொலைபேசியில் சொல்லியிருக்கலாம். ஆனால், அந்த "பழைய" கால பழக்கவழக்கங்கள் எல்லாம், இந்தக்கால குழந்தைகளிடம் மறந்துபோய் விட்டன. அவர்கள் மொழியில் அவர்களிடம் பேசும்போது அவர்களை இயக்குவது இலகுவாகி விடுகிறது.

இத்தகைய கேள்வி பதில்களை தங்களுக்குள் பரிமாறுவது கூட, ஏற்கனவே தயாரான நிலையில் பட்டியலாக விரிந்து கிடக்கின்றன. ஒரே சொடுக்கில் கேள்வி அல்லது பதில், தகவலாக சென்று விடுகிறது. அதேவேளை, ஒருவர் செய்யும் வேலையை அல்லது இருக்கும் இடத்தை விட்டு, தன்னை அல்லது தனது கவனத்தைத் திருப்பும் தேவை எழவில்லை. அவரவர் செய்த அனைத்தும் அப்படியே செய்யப்பட்டுக் கொண்டிருக்க, தகவல் பரிமாற்றம் தங்களையறியாது பறந்து செல்கிறது. இதுதான் இங்கு நாம் பார்க்கும் விந்தையான உலகம்.

(மார்ச் இதழில் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாம் இருவர் - நமக்கு மூவர்

## புதிய தமிழ்த் தம்பதியினருக்கு 5000 டாலர்கள் ஊக்குவிப்புப் பணம்

### தமிழர் தகவலின் 15 ஆண்டு பூர்த்தியை முன்னிட்ட சிறப்புத் திட்டம்

தமிழர் தகவல் பதினைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளதை முன்னிட்டு தமிழர் சமூக நலன் சார்ந்த புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. எமது சமூகத்தில் குழந்தை பிறப்பு வீதம் வெகுவாகக் குறைந்து வருவதைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஒரு வரியில் இத்திட்டத்தைச் சொல்வதானால், '2005 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் சட்டப்படி திருமணம் புரிந்த/புரியும் தமிழ்த் தம்பதியினர், திருமணத் திகதியிலிருந்து வரும் ஆறு வருடங்களுக்குள் மூன்று குழந்தைகளைப் பெறுவார்களானால். அவர்கள் 5000 கனடிய டாலர்களை ஊக்குவிப்புப் பணமாகப் பெறுவர்'.

எத்தனை தம்பதியினருக்கு இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாடில்லை. ஒவ்வொரு தம்பதியினருக்கும் தலா ஐயாயிரம் டாலர்கள் வழங்கப்படும். முதலாவது தம்பதியினருக்கான பணத்தை 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவிருந்து அகால மரணமடைந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்தமாக இந்நிதி வழங்கப்படுகின்றது.

தமிழ்க் குழந்தைகள் ஊக்குவிப்புத் திட்டத்தின் முதற் கட்டம் 2010 டிசம்பர் 31ல் முடிவடையும். அதாவது, 2005 ஜனவரி 1 திகதிக்குப் பின்னர் திருமணமாகும் தம்பதியினர், அடுத்து வரும் ஆறு வருடங்களான 2010 டிசம்பர் 31க்கு முன்னர் எப்போது மூன்று குழந்தைகளைப் (ஒற்றைப் பிரசவங்களாக) பெறுகின்றனரோ, அப்போது தமக்கான 5000 டாலர்களைப் பெறுவார்கள்.

எங்கள் களத்திலும் புலத்திலும் (தாயகத்திலும் புகலிடத்திலும்) பிள்ளைகள் பிறப்பு வீதம் மிக அருகி வருகின்றது. புதிய தம்பதியர் ஒரு குழந்தையுடன் நிறுத்தி விடுகின்றனர். மறுபுறத்தில், திருமணமாகும் வயதும் பின்னோக்கிச் செல்கின்றது. அடுத்த பக்கத்தில், உள்நாட்டு யுத்தத்தினால் தமிழர் இறப்பு வீதம் ஓங்கிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு தசாப்தத்தில், அப்பாவி மக்களும் போராளிகளுமாக சுமார் ஒரு லட்சத்தை எட்டிப்பிடிக்கும் எம்மவர் மரணமாகியுள்ளனர். பத்து லட்சம் வரையானோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு தமிழர் குடும்பத்திலும் சராசரியாக 4 அல்லது 5 பிள்ளைகள் என்றிருந்த நிலை இன்று மாறிவிட்டது. ஒரு பிள்ளையைப் பெறுவதற்குக்கூட மூன்று-நான்கு வருடங்களைப் பின்போடும் தம்பதியினரையே இன்று கூடுதலாகக் காண்கின்றோம். இந்த நிலைமை. மாற்றம் பெற வேண்டும். தமிழர் சனத்தொகை கீழோங்கிச் செல்வதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் நியதி.

இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். குழந்தைச் செல்வங்களின் அதிகரிப்பின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த ஊக்குவிப்புத் திட்டம் பற்றிய விபரமான விளக்கத்தை தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தத் திட்டம் ஒரு பொழுதுபோக்குப் போட்டியன்று. சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு. மற்றைய முன்னணித் தமிழ் ஊடகங்களிலும் இவ்விபரங்கள் வெளியிடப்படும். விரிவான விபரங்களைப் பெற 416 920 9250.

---

# இந்த மாதம் 23 திகதி முதல் அமெரிக்க விமானப் பயணத்துக்கு கடவுச் சீட்டு கட்டாயம்

கனடியர்கள் எவரும் இந்த மாதம் (ஜனவரி 2007) 23ம் திகதிக்குப் பின்னர் கனடிய கடவுச் சீட்டு இல்லாமல் அமெரிக்காவுக்கு விமானங்களில் பயணம் செய்ய முடியாது. சில மாதங்களாக இழுபறியில் இருந்து வந்த இந்தப் பிரச்சனைக்கு அமெரிக்க அரசு இப்போது ஒரு முடிவு கண்டுவிட்டது. அதேபோன்று, 2008 ஜுன் மாதத்திலிருந்து கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு தரை மற்றும் கடல் வழியாக மேற்கொள்ளும் பயணங்களுக்கும் கடவுச் சீட்டு வைத்திருக்க வேண்டும்.

2001 செப்டம்பர் 11ம் திகதிய இரட்டைக் கோபுர குண்டுத் தாக்குதலின் பின்னர் அமலுக்கு வந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அந்நாட்டின் பாதுகாப்புக் கருதி கடவுச் சீட்டுக் கட்டாயம் நடைமுறைக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறைப் பிரகாரம் கனடாவில் தங்கியிருக்கும் அல்லது வேலை பார்க்கும் அமெரிக்கர்களும் விமான மூலம் அமெரிக்கா செல்கையில் அவர்களது கடவுச்சீட்டு கட்டாயமாக இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்கள் திருப்பியனுப்பப்படும் சாத்தியமுண்டு. இந்தப் புதிய நடைமுறையின் இரண்டாம் கட்டத்தின் கீழ், அமெரிக்க எல்லைகளைத் தரை வழியாக அல்லது கடல் வழியாகக் கடப்பதற்கும் கனடியர்கள் கடவுச்சீட்டு வைத்திருக்க வேண்டுமென்பது அவசியமாகின்றது. ஆனால் எப்போதிருந்து இரண்டாம் கட்டம் நடைமுறைக்கு வருமென்று இன்னமும் அறிவிக்கப்படவில்லை. கனடிய அரசின் மென்போக்குக் காரணத்தால் சர்வதேச தீவிரவாதிகள் கனடாவில் தங்கியிருக்கலாமென்று அமெரிக்கா நம்புகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழர் அரசியல் வான்பரப்பின் துருவ நட்சத்திரம் உதிர்ந்தது

# தமிழருக்குச் சுயாட்சி கேட்ட முதல்வர் காவலூர் நவம் அவர்களுக்கு நாட்டுப்பற்றாளர் மதிப்பளிப்பு



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிறுவனர்களில் ஒருவரும், தமிழர் சுயாட்சிக் கழகத்தின் ஸ்தாபக தலைவருமான ஊர்காவற்றுறைத் தொகுதியின் முன்னாள் எம் பி. திரு. வ. நவரத்தினம் அவர்கள் கடந்த மாதம் (2006 டிசம்பர்) 22ம் திகதி வியாழக்கிழமை தமது 97வது வயதில் கனடாவின் மொன்றியல் நகரிலுள்ள தமதில்லத்தில் அமைதியாக இவ்வுலக வாழ்வு நீத்தார். இவரது அறிவாற்றல், படைப்பாற்றல், செயலாற்றல் ஆகியவைகளை வியந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 'நாட்டுப்பற்றாளர்' பட்டம் வழங்கி மதிப்பளித்துள்ளது.

'காவலூர் நவம்' என்று மக்களால் அழைக்கப்பட்டு வந்த இவர் சுமார் முப்பதாண்டுகள் தமிழரசுக் கட்சியை வழிநடத்திய மூத்தவர்களில் ஒருவராகவிருந்து 'தமிழரசின் மூளை' என்று வர்ணிக்கப்பட்டவர். 1910 அக்டோபர் 18ம் திகதி கரம்பனில் பிறந்த இவர் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் கற்று, பின்னர் வழக்கறிஞராகி 58 வருடங்கள் அத்துறையில் இருந்தார்.

தமிழரசுக் கட்சியின் செயலாளராக இவர் பணியாற்றிய காலத்திலேயே, 1961ல் தமிழ்ப் பகுதிகளில் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. அத்துடன், தமிழரசு முத்திரையும் வெளியிடப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சி சிங்களத் தலைவர்களுடன் நடத்திய சகல பேச்சுவார்த்தைகளிலும் பங்குபற்றிய திரு. நவரத்தினம் அவர்கள், டட்லி-செல்வா ஒப்பந்தத்தைத் தயாரிப்பதில் பிரதான பங்கு வகித்தவர்.1965ல் டட்லி அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி அங்கம் வகித்த வேளையில், அடையாள அட்டை மசோதா கொண்டு வரப்பட்டது. இது தமிழர்களுக்குப் பல பாதிப்புகளை ஏற்படுத்துமென்று சுட்டிக்காட்டிய திரு. நவரத்தினம் அவர்கள் இதனை எதிர்க்க வேண்டுமென்று கட்சிக்குள் வாதாடினார். ஆனால் தமிழரசுக் கட்சி இவரது கருத்தை ஏற்காது மசோதாவை ஆதரித்து வாக்களிக்க இவர் எதிர்த்து வாக்களித்தார். இதனையடுத்து இவரைக் கட்சி வெளியேற்றியது.

1969ல் தமிழர் சுயாட்சிக் கழகத்தை உருவாக்கிய இவர், தமிழருக்குத் தனி ராஜ்யமே இறுதித் தீர்வு என்று கூறி, தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தி இதனைப் பெற்றெடுக்க வேண்டுமென்று பகிரங்கமாகத் தெரிவித்தார்.

திரு. நவரத்தினம் அவர்களின் தமிழர் சுயாட்சிக் கொள்கை தமது மனதில் ஆழமாக வேரூன்றியதென்றும், விடுதலை அமைப்பின் உருவாக்கத்துக்கு இது பெரும் பங்காற்றியது என்றும் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் பல தடவை சுட்டிக் கூறியுள்ளார்.

'இலங்கை பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றது" என்ற தலைப்பில் எழுதிய முதலாவது ஆங்கில நூல் 1956 இல் வெளிவந்து, தமிழர் பிரச்சனையை உலக அரங்குக்கு எடுத்துச் சென்றது. 'தமிழ்த் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation) என்ற இவரது இரண்டாவது நூல் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரையான அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது.

இவரது இறுதி நூலான 'தமிழர் பூர்வீகம் - சொல்லப்படாத வரலாறு' (Tamil Civilization - The Untold History) என்ற நூல் இந்தாண்டு மார்ச் மாதம் ரொறன்ரோவில் வெளியீடு கண்டது. இவ்வைபவத்தில் அரசியல்ஞானி வ. நவரத்தினம் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக தமிழர் தகவல் சிறப்புப் பட்டயம் வழங்கப்பட்டு தங்கப் பதக்கம் சூட்டப்பட்டது. இவரால் எழுதப்பட்ட 'திருவாசகம்' நூல் கடந்த வருடம் தமிழகத்தில் அச்சேறியது. மேலும் இரு தமிழ் ஆய்வு நூல்கள் கனடாவில் அச்சாகிக் கொண்டிருக்கின்றன.

இவரது தர்மபத்தினியார் பரமேஸ்வரி (80) மொன்றியலில் வசிக்கின்றார். இவர்களுக்கு சந்திரமோகன் (இரசாயன பொறியியலாளர்), என். ஜெகன் (தொழிலகங்கள் நான்கின் அதிபர்), கனடிய மூத்த வழக்கறிஞர் ஜெகன்மோகன், ராஜமோகன் (பொறியியலாளர்), என். சியாமளா (இங்கிலாந்து அரச சேவை அதிகாரி), பாலமோகன் (பொறியியலாளர்) ஆகிய ஆறு பிள்ளைகள் உள்ளனர். பெரியாரது புகழுடல் இந்து சமய முறையிலான சடங்குகளின் பின்னர் டிசம்பர் 26ம் திகதி மொன்றியலில் தகனம் செய்யப்பட்டது.

தமிழருக்கு நிரந்தரத் தமிழீழம் விரைவில் மலரும் என்றும், 'மறுபிறப்பொன்று இருக்குமானால் மீண்டுமொரு தமிழனாக தமிழீழத்தில் பிறக்க ஆசைப்படுகின்றேன்" எனவும் கடைசி வரை உரைத்து வந்த நாட்டுப்பற்றாளர் இவர்.

உடல் தள்ளாத நிலையிலும், கடுமையான சுகவீனத்துக்கு ஆளாகாது நினைவாற்றலுடனும், மனப் பலத்துடனும் மலரப்போகும் தமிழீழ நினைவுடனும் வாழ்ந்து வந்த பெரியார் நவரத்தினம் கடைசியாக எழுதிய அரசியற் கட்டுரை அவரது மறைவு நாளன்று 'தமிழ் நெட்' இணையத் தளத்தில் வெளியானது. சிறீலங்காவின் 1972ம் ஆண்டினது அரசியல் யாப்பிற்குச் சவால் விடும் கட்டுரையாக இது அமைந்தது.

முற்றிப் பழுத்த அரசியற் கனியாக ஈழத்தமிழர் வான் பரப்பில் ஒளிவிட்டுப் பிரகாசித்திருந்த துருவ நட்சத்திரம் உதிர்ந்து விட்டது. அதிமூத்த தமிழ் அரசியலாளரை தமிழீழம் முக்கியமான கால கட்டத்தில் இழந்து விட்டது. ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பு இது.

- திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.

# இது எப்பிடி இருக்கு?

## யோசித்துப் பேசு சிந்தித்து எழுது

எதனையும் பேச,எழுத முன்னர் இரண்டு தடவை சிந்திக்க வேண்டும் என்பர் மூத்தோர்.

இது முற்றிலும் உண்மை என்பதை அண்மையில் நேரடியாகப் பலராலும் அறிய முடிந்தது.

எங்களின் 'தேசத்தின் குரல்' பாலாண்ணையின் இங்கு நடந்த வணக்கக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய தமிழ்ப் பிரமுகர் ஒருவர் 'இன்றைய நாள் ஒரு கறை படிந்த நாள்' என்று சொன்னபோது அனைவரும் ஒருவரையொருவர் பார்த்து புருவத்தை உயர்த்த நேர்ந்தது.

ஒரு பத்திரிகை (?) இம்மரணம் பற்றி எழுதிய தலையங்கத்தில் "இதனை ஒரு சகிக்க முடியாத மரணம்" என்ற அர்த்தப்பட எழுதியிருந்தது. இந்த எழுத்தைத்தான் சகிக்க முடியாது இருந்தது என்பதுவே உண்மை.

இவை தற்செயலான தவறுகளா? திட்டமிட்டு செய்யப்படுகின்றனவா? எவருக்காவது தெரியுமா?

## அவளைத் தொடுவதேன் அவஸ்தைப் படுவதேன்!

அரங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு இந்திய பிரமுகர்களை(?) இறக்கிய பலரின் பரிதாபக் குரல்களை இப்போது கேட்க முடிகின்றது.

வருவதற்குக் கொடுத்த வரியற்ற ஆயிரங்களுக்கு மேலாக இங்கு சூறையாடிச் சென்றுள்ளனராம்.

ஒரு நாளைக்கு குறைந்தது பத்துத் தடவைாவது மணிக்கணக்கில் இந்தியாவிலுள்ள பலருடனும் அரட்டை; தாய் தந்தை மற்றும் உறவினர்களுக்கு அன்பளிப்புகள் (இவை இந்தியாவில் தயாரான பட்டாடைகளே); சிலருக்கு அவசர வைத்திய சிகிச்சை உபகரணங்கள்; மகளுக்கு அரங்கேற்றம் செய்த ஒருவர் மார்க்கம் வீட்டை விற்பனைக்கு விடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளாரென்றால்.....

மாமியார் சேலை அவிழ்ந்தால் சொல்ல முடியாது, கட்டி விடவும் முடியாத மருமகர் நிலையில் பலர் தவிக்கின்றனராம்!

## பூனைக்குட்டிக் காசோலை அனுபவமுண்டா?

கனடியத் தமிழர்களிடையே 'பூனைக்குட்டி செக் (காசோலை) என்றொரு சொல் வழக்கிலுண்டு. எவராவது பணத்துக்குப் பதிலாக காசோலை கொடுத்தால் "இது பூனைக்குட்டி செக்கா?" என்று நேரடியாகவே கேட்கின்றனராம். காரணம், இந்த காசோலைகளை வங்கியில் இருப்பிலிட்டால் உடனடியாக அவை திரும்பி வந்து விடுகின்றனவாம். குறிப்பிட்ட கணக்கில் பணம் இருப்பதில்லை.

எங்கள் ஊரில் வீட்டில் வளர்க்க விரும்பாத பூனைக்குட்டிகளை மயானம், வயல் போன்ற தூர இடங்களுக்குக் கொண்டு சென்று விடுவது வழமை. ஆனால், அதனைக் கொண்டு சென்றவர் வீடு திரும்புவதற்கு முன்னரே அந்தப் பூனை வீட்டுக்கு வந்து வாசலில் நிற்கும்.

'பூனைக்குட்டி செக்' என்றால், அந்தக் காசோலை நிச்சயமாகத் திரும்பி வரும் என்பதே அர்த்தம்.

இதனைக் காரணப் பெயர் என்கிறார்கள்.

திரும்பிவராத நம்பகமான காசோலைகளை 'புலிக்குட்டி செக்' என்று சிலர் அழைக்கின்றனர். இதுவும் காரணப் பெயர்தானாம்!

## உதாசனன் உலா விருந்து

## அப்பாவுக்குச் சிலை மகனுக்குச் சதுக்கம்

சிங்கள நாட்டின் ஜனாதிபதி மகிந்தவின் தந்தையார் டி. ஏ. ராஜபக்ஷ மரணமாகி 39 வருடங்கள். சிங்கள அரசியல் அரங்கில் இவரை இதுவரை எவரும் பெரிதாகப் பார்க்கவில்லை.

இப்போது தமது பெலியத்த தொகுதியில் அவரது சிலையை நிறுவித் தாமே திறந்து வைத்துள்ளார் நன்றி மறவாத தனயன் மகிந்த.

இவ்வாறான ஒரு பரிதாப நிலைமை தமக்கும் ஏற்படும் என்பதை நன்குணர்ந்து சில கைங்கரியங்களைத் தாம் உயிருடன் இருக்கும்போதே ஆரம்பித்துள்ளார்.

மகிந்த சதுக்கம் - இதற்காகக் கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு முன்னாலுள்ள பல முக்கிய கட்டிடங்கள் சுவீகாரம் செய்யப்படுகின்றன. மிகிந்த (மகிந்த) வான்சேவை என்ற பெயரில் விமானச்சேவை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

வீரவிலவில் கல் நாட்டப்பட்ட சர்வதேச விமான நிலையத்துக்கும் தமது பெயரையே சூட்டவுள்ளாராம். ஏன் இவ்வளவு பிரச்சனை? சிறீலங்காவின் பெயரையே சிறீமகிந்த என மாற்றிவிடலாமே!

## கள்ள நோட்டுகளில் கனடாவின் சாதனை!

கள்ள நோட்டுகள் பாவனையில் முன்னெப்போதுமில்லாத தொகை தற்போது புழக்கத்திலிருப்பதாகக் கனடிய வங்கி அறிவித்துள்ளது.

2006ஆம் ஆண்டில் ஒவ்வொரு ஒரு மில்லியன் டாலர் தொகை நோட்டுகளில் சுமார் நூறு வரை கள்ள நோட்டுகள் இருந்தனவாம். தற்போது இது, 120 ஆக அதிகரித்துவிட்டது. ஐந்து டாலர் தவிர்ந்த மற்றைய அனைத்திலும் தாராள கள்ள நோட்டுகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைமன்றத்தின் இரண்டாவது ஆண்டு 'நிருத்த நிறைஞர்' பட்டமளிப்பு விழா









கனடாவின் பிரபல நடனக் கல்லூரியான 'கலைமன்றத்தின்' இரண்டாவதாண்டு 'நிருத்த நிறைஞர்' பட்டமளிப்பு விழா கடந்தமாதம் 2 திகதி ஸ்காபரோ 'அஸ்ரன்பி' வளாக அரங்கத்தில் நடைபெற்றது. கனடாவில் 1997ம் ஆண்டு முதல் நடனத்துக்கெனப் பரீட்சை நடத்தி வரும் கலைமன்றம், நடன ஆசிரியர்களை உருவாக்கி, அவர்களுக்கு டிப்புளோமா தராதர-மான 'நிருத்த நிறைஞர்' பட்டத்தினைக் கடந்த ஆண்டிலிருந்து வழங்கி வருகின்றது. கடந்தாண்டு ஆறு மாணவர் பட்டம் பெற்றனர். இவ்வருட விழாவில் ஐந்து மாணவர் பெற்றனர். 'தமிழர் தகவல்' பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் செல்விகள் இந்துஜா இராஜதுரை, நயனி இராஜமோகன், யாழினி தயாபரன், அனந்தவர்ஷனி ஜெயராஜசிங்கம், நிஷானி மரியசீலன் ஆகியோர் பட்டம் பெற்றனர். கவிஞர் வி. கந்தவனம், முன்னாள் அதிபர் நாக சண்முகநாதபிள்ளை, எழுத்தாளர் வசந்தா நடராஜன், டாக்டர் விக்டர் பிகராடோ ஆகியோர் பட்டம் பெற்றவர்களைப் பற்றிய அறிமுகவுரை களை நிகழ்த்தினர். பிரபல நடனக் கலைஞர் ஜனக் கே. ஹென்றி, தலைவர் திரு எஸ். திருச்செல்வம், தமிழர் செந்தாமரை ஆசிரியர் கனக அரசரத்தினம், சமூகப் பணியாளர் களான தாட்சாயிணி நீதன், சபா. வரதராஜா ஆகியோர் மாணவிகளுக்குப் பட்டம் சூட்டிக் கௌரவித்தனர்.



ஒளிப்படங்கள்: பிரான்சிஸ் ராதா
ஏ1 கொழும்பு ஸ்ரூடியோ



கலைமன்ற ஆசிரியர் திருமதி நிறைஞ்சனா சந்துரு ஆரம்பவுரையை நிகழ்த்தியதுடன், மாணவிகளுக்குப் பதக்கம் சான்றிதழ்களையும் கையளித்தார். செல்விகள் ஐஸ்வர்யா-அபிநயா சகோதரிகளால் தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசிய கீதம் ஆகியன இசைக்கப்பட்டது. கலைமன்றத்தில் கடந்தாண்டு பட்டம் பெற்ற கவிதா பத்திநாதர் விழா நெறியாளராகப் பணியாற்றினார். கலைமன்றத்தின் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்களுக்குச் இறுதியாக சான்றிதழ் வழங்கப்பட்டது.

(இன்னும் படங்கள் 20ஆம் பக்கத்திலுள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு செல்லாக் காசை என் தலையில் கட்டப் பார்க்கிறாயா?

## பாகம்-2
## கட்டாந்தரை களனியானது

அவர்கள் இருவருமே இலங்கைப் பட்டதாரிகள். அவர்களுக்கு மிகவும் பழக்கப்பட்ட சூழல். அதனாலே ஆசிரியர்களுடனோ, மாணவர்களுடனோ பழகுவதில் சிரமம் ஏற்படவில்லை. எனக்கு அங்கே உள்ளவர்களில் இருவரைத்தான் ஏதோ முன்னர் கண்டுள்ளதாக ஞாபகம். ஆனாலும் எல்லா ஆசிரியர்களும் மிகவும் சினேகபாவத்துடன் பழகினார்கள். வாரியர் நேரசூசி தந்தார். எதிர்பார்த்தபடி 9, 10, 11, 12 ஆகிய தரங்களுக்கு விலங்கியல் போதிக்க வேண்டும்.

மாணவர்களைக் கவர்ந்து கற்பிக்கின்ற நேரத்தில் அவர்களுடைய முழு கவனத்தையும் ஈர்த்தால் தான் ஆசிரியத் தொழிலில் வெற்றியீட்ட முடியும் என்பதற்கு கிறிஸ்தவக் கல்லூரிப் பேராசிரியர் கலாநிதி சஞ்சீவராஜ் முன் உதாரணமாக இருந்தார். அவரைப் பின்பற்ற வேண்டும் என எண்ணினேன். போதிக்க வேண்டிய பாடத்தை மிகவும் நிறைவாக ஆயத்தம் செய்தேன். எந்தவித குறிப்போ, புத்தகத் தினைப் பார்த்து விளக்கப் படம் வரைதலையோ விடுத்தேன். ஆகவே மறுநாள் கற்பிக்க வேண்டியதை முழுமை யாக ஆயத்தம் செய்து விடுவேன். இதனை நான் இருபத்தி ஐந்து வருட ஆசிரியப் பணியின் போதும் கடைப்பிடித் தேன். மறுநாள் படிப்பிக்க வேண்டியதைப் பற்றி முதல் நாள் சிந்தித்தால் புதிய நகைச் சுவைத் துணுக்குகள் கூட மனதில் வரலாம். கொஞ்சம் இடையிடையே ஏதாவது சொல்லிச் சிரிக்க வைத்தால் தான் வகுப்பும் கலகலப்பாக நடைபெறும்.

அங்கே, பிரபலமான இரசாயனவியல் பிரத்தியேக பாடபோதனையாளராக இருந்தவர் திரு வி. ரி. கந்தசாமி அவர்கள். ஒரு சமயம் அவர் வகுப்பு நடத்துகின்ற பொழுது ஒரு நகைச்சுவைத் துணுக்குக் கூறினார். அங்கே இருந்த மாணவன் ஒருவன் நக்கலாக இதனை நான்காவது வருடமாகக் கேட்கிறேன் என்றானாம். ஆசிரியர் சாதுரியமாக நீ நான்கு வருடம் தொடர்ந்து ஒரே வகுப்பில் இருப்பதற்கு நான் என்ன செய்ய முடியும் என்றாராம்.

வகுப்பிற்குப் போகும் பொழுது ஆயத்தம் செய்யாமல் போவது மாணவர்களுக்கு ஆசிரியர் மேல் உள்ள மதிப்பை குறைத்துவிடக் காரணமாக அமையும். பிரபல தபேலாக் கலைஞர் அல்லா றாக்க என்பவர் உலகம் புகழும் ஒப்பற்ற கலைஞர். "நான் ஒரு நாள் அப்பியாசித்துப் பார்க்காமல் மறுநாள் மேடையில் வாசித்தேன் என்றால் அது எனக்கே புரிந்து விடும். ஒரு வாரம் அப்பியாசிக்காமல் மேடையில் சேவித்தேன் என்றால் அந்த மண்டபத்தில் உள்ளோருக்குப் புரிந்துவிடும், ஒரு மாதம் அப்பியாசிக்காமல் சேவித்தேன் என்றால் இந்த உலகத்துக்கே புரிந்துவிடும்" எனக் கூறியுள்ளார். மகாஜனக் கல்லூரியின் பாரிஸ் கிளையினர் அண்மையில், "பவளமல்லி" எனும் கட்டுரைத் தொகுதி ஒன்றினைப் பிரசுரித்துள்ளனர். அதில் வலிகாமம் வடக்கின் உதவிக் கல்விப் பணிப்பாளராகிய திருமதி கோகிலா மகேந்திரன் எனும் பிரபல எழுத்தாளரும், எனது மாணவியும், "அநேக ஆசிரியர்களைப் போல் வகுப்பினிற்கு வந்ததும் நேற்று எங்கு விட்டேன் எனக் கேட்கும் வர்க்கமல்ல" என என்னைப் பற்றிக் கூறியதை மாணவர்கள் ஆசிரியர்களை எங்ஙனம் கணித்து வைக்கின்றார்கள் எனத் தெரிந்து கொள்ள முடிகிறது.

நன்றாக ஆயத்தப்படுத்திக் கொண்டு போவதால் மணிச் சத்தம் கேட்டதும் போதித்துக் கொண்டிருந்தால் என்ன, குறிப்புக்கள் சொல்லிக் கொண்டிருந்தால்

**பொ. கனகசபாபதி**
மகாஜன முன்னாள் அதிபர்

என்ன அந்த வசனத்தை அதே இடத்தில் விட்டு விட்டுச் சென்று விடுவேன். முடித்து விட்டும் செல்வதில்லை. அடுத்த வகுப்பு மறுநாளாயிருந்தால் என்ன, மறு வாரமாயிருந்தால் என்ன, மறு தவணையாக இருந்தால் என்ன முதல் வகுப்பினில் விட்ட அதே இடத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஞாபகசக்தியையும் வளர்த்துக் கொண்டேன்.

நியூஜேர்சியில் மருத்துவராகக் கடமையாற்றும் எனது மாணவன் ஜெகநாதன் மலையகத் தமிழன். மிக்க பணிவோடு பழகும் வகையினன். நான் கனடா வந்ததை அறிந்து என்னை வந்து சந்தித்த பொழுது பலவும் பேசிய பின்னர் "இந்த 30 வருடங்களாக எனது மனதில் நின்ற கேள்வியை இப்போ கேட்கிறேன், பதில் சொல்லுங்கள் எனக் கேட்டு "அது எப்படி முதல் வகுப்பிலே இடையே விட்டதிலிருந்து அடுத்த வகுப்பில் உங்களால் ஆரம்பிக்க முடிகிறது" என்றார். இவற்றினை நான் சொல்வதற்குக் காரணம் ஆசிரியர்களை மாணவர்கள் எங்ஙனம் எடை போடுகிறார்கள். எந்த அம்சத்தை மனதில் கொண்டு அவர்களை நினைவில் வைத்தி ருக்கிறார்கள் என்பதை தெரிவிப்பதற்காகவே.

மணியடித்ததும் வகுப்பில் இருப்பது, மணி அடித்ததும் வகுப்பை முடிப்பது எனது கொள்கையானதும், சகசமாகப் பழகும் பண்பு மாணவர்களுக்குப் பிடித்தது, பாட-சாலைக்கு நேரம் பிந்தாமல் வருவது, விடுப்பு எடுக்காமல் கடமையாற்றுவது, வகுப்புகட்கு மணி அடித்ததும் செல்வது, எந்த வேலை தந்தாலும் செய்வது அதிபருக்குப் பிடித்தது. அங்கே என்போன்ற இளவட்டங்களால் ஆன ஒரு கோஷ்டி இருந்தது. கிழமை நேரங்களில் மாலை ரென்னிஸ் அல்லது கடுதாசி விளையாட்டு, சனிக்கிழமைகளில் யாழ்ப்பாணம் படம், உதைபந்தாட்டம், தாமோதரவிலாசில் மசாலா தோசை என உல்லாசமாகப் பொழுது போனது. எனக்கு மகாஜனாவைப் பிடித்தது. ஆகவே மூன்றுமாதக் கெடு முடிந்ததும் ஒறேற்றர், ஜெயரத்தினத்திடம் கனகசபாபதியை எனக்குத் தருகிறாயா எனக் கேட்ட பொழுது அவர் மறுத்தார். என்னை இங்கே வாயேன் எனக் கேட்க நானும் மறுத்தேன். ஆகவே ஒறேற்றர் அவர்கள் இன்னொரு பழைய மாணவனான சிவபாதசுந்தரத்தை விலங்கியல் ஆசிரியராக நியமித்தார்.

1960 மகாஜனாவின் பொன்விழா. அதற்கு முன்னர் பாடசாலையில் பல பணிகள் ஆற்றப்பட வேண்டியிருந்தன என்பதை அதிபர் உணர்ந்திருந்தார். இந்தப் பெரும் பாடசாலையின் ஒரு பற்றாக்குறை அதற்கு என ஒரு சொந்தமான கிணறு இல்லாமையே எனப் பல சந்தர்ப்பங்களிலே நான் சொல்லியுள்ளேன். ஆனால் இதனை அங்கே அதிபர்களாக இருந்த எவருமே பெரிது படுத்தாமைக்குக் காரணம் இருந்தது. இந்தக்குறை நிவர்த்திக்கப் பட்டது 1980களிலேயே.

அதிபர் ஜெயரத்தினம் காலத்திலேயோ அல்லது மாணவர் தொகையில் எட்டாத உயரத்திற்குச் சென்று அது 2500க்கும் அதிகமான மாணவர்கள் கல்வியும் 125 மாணவர்கள் வரை விடுதிச் சாலையில் வாழ்ந்தும் கொண்டிருந்த நான் அதிபராக இருந்த காலத்திலும் மகாஜனா பங்குக் கிணற்றுடனேயே காலந்தள்ளிற்று என்பது ஆச்சரியமே.

தென்மேற்கு மூலையிலே ஒரு பங்குக் கிணறும் கிழக்குப் புறத்தே இன்னொரு பங்குக் கிணறும் இருந்த போதிலும் கிழக்குப் புறக் கிணறே தான் எம் பாடசாலை யின் நீர்த் தேவையினுக்கு ஈடு செய்தது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் பாடசாலையின் அருகே வாழ்ந்த பெருமக்களே. அந்தக் குடும்பங்களின் நல்ல மனதை என்றும் பாராட்டியே தீர வேண்டும். சில நாட்களிலே கிணற்றில் உள்ள நீர் முற்றாகவே இறைக்கப்பட்டு தண்ணீர் அற்ற நிலையில்'

(26ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம்பாடி இசைக்குழுவின் புயலாகும் புதுராகம்



ஆண்டுதோறும் வானம்பாடி இசைக்குழுவினரால் நடத்தப்படும் "புயலாகும் புதுராகம் - 2006" நிகழ்ச்சியானது, பதினேழாவது தடவையாகச் சென்ற ஒக்ரோபர் மாதம் பதினான்காம் திகதி ரொறன்ரோ மக்டொனால்ட் கல்லூரிக் கலையரங்கத்தில் மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் நடைபெற்றது. உயிரினும் மேலான தமிழீழத் தாயகத்தின் வரைபடமானது நடுவே வைக்கப்பட்டு, இருபுறமும் தீபங்கள் ஒளிவீசிப் பிரகாசிக்க, அவற்றைச் சூழப் பலநிற வர்ணங்களாலும் சித்திரங்கள் வரையப்பட்டு எழிற்கோலத்திற் காணப்பட்டது. தொடர்ந்து தமிழீழத்தின்



விடுதலைக்காய்த் தமையீந்த மாவீரர்களுக்கும், மக்களுக்குமான அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. அடுத்து இசை வடிவமொன்று பல அர்த்தங்களைக் கொண்டதாகப் பல்வேறு ஒலிகளில் மீட்கப்பட்டது. இத்தரவானது இனம்புரியாத உணர்வினை ஏற்படுத்தும் விதத்தில் ஈர்ந்தது. எமது பாரம்பரிய இசை வடிவங்களில் முக்கியத்துவம் வாய்ந்த நாதஸ்வர, தவில் நிகழ்ச்சியானது, முற்றிலும் எமது உள்ளங்களைக் கவரும் போராட்டப் பாடல்களையே உள்ளடக்கியதாக இருந்தமையால், மிகவும் உற்சாகத்துடன் சுவைத்து மகிழக் கூடியதாக இருந்தது. தமது நேரத்தைப் பொருட் படுத்தாது, எமக்காக எதுவித பிரதிபலனும் பெற்றுக் கொள்ளாது அருமையான வாத்திய நிகழ்ச்சியை எமக்களித்த அனைத்துக் கலைஞர்களும், விழா நடுவே விருது வழங்கி மேன்மைப்படுத்தப் பட்டமை கட்டாயமான ஒன்றே! நிகழ்ச்சிகளை வானம்பாடிக் குழுவின் நீண்டகாலத் தொகுப்பாளரான திரு.சிவகுமார் அருளானந்தம் அவர்கள், தனது சிம்மக் குரலிற் தொகுத்து வழங்கினார்.

## சர்வதேசத் தமிழர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி






தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளை அனுசரணையுடன் ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் - பிரான்ஸ்" சர்வதேச ரீதியில் 3ஆவது தடவையாக நடத்திய லெப்.கேணல் விக்ரர் (ஒஸ்கா) நினைவுக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி AULNY SOUS BOIS நகரத்தில் STADE ROSE DES VENTS மைதானத்தில் நடைபெற்றது. பொதுச்சுடரினை வீரவேங்கை சறோஜனின் பெற்றோர்கள் ஏற்றி வைக்க பிரெஞ்சு தேசியக் கொடியினை லாக்கூர்னொவ் மாநகர சபையின் உறுப்பினரும், ஆலோசகருமான அந்தோனி ரூசெல்சும் தமிழீழ தேசியக் கொடியினை பிரெஞ்சுக்கிளை செயற்பாட்டாளர் பார்த்தீபனும் ஈகைச் சுடரினை மாவீரர் லெப்.கேணல் விக்ரரின் சகோதரர் றொனியும் ஏற்றி வைத்து அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது. இப்போட்டிகளில் பங்குகொள்ள ஐரோப்பிய நாடுகளில் இருந்து அணிகள் கலந்து கொண்டு மாவீரர் வெற்றிக் கிண்ணப் போட்டியை சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு நல்கியிருந்தன. இறுதியாக லெப்.கேணல் விக்ரர் (ஒஸ்கா) நினைவுக் கிண்ணத்தை பெற்றுக் கொள்வதற்கான போட்டிக்கு பிரான்ஸ் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், ஈழவர் விளையாட்டுக் கழகமும் தெரிவாகியிருந்தன. நினைவுச் சுற்றுக்கிண்ணத்தினை பிரான்ஸ் ஈழவர் விளையாட்டுக் கழகம் தனதாக்கிக் கொண்டது. அதற்குரிய பரிசினை அந்தோனிரூசெல் வழங்கிக் கௌரவித்தார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# IBC சர்வதேச போட்டியில் கனடா லஷ்மி முதலிடம்



இங்கிலாந்தின் இலண்டனிலிருந்து ஐரோப்பா முழுவதும் நேரடியாக ஒலிபரப்பாகும் சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (International Broadcasting Corporation - IBC) 2006ம் ஆண்டுக்கென உலகளாவிய ரீதியில் நடத்திய இன்னிசைக் குரல் போட்டியில், கனடாவின் 'இளங்குயில்' லக்சுமி சிவநேஸ்வரலிங்கம் முதலிடத்தைப் பெற்று சாதனை புரிந்து, கனடியத் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார். கடந்த மாதம் இலண்டனில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்து, பிரான்ஸ், நோர்வே, ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க, கனடா ஆகிய நாடுகளிலிருந்து தெரிவான எட்டுப் பேர் கலந்து கொண்டனர்.

கடந்த மாதம் 2ம் திகதி கனடாவில் நடைபெற்ற இன்னிசைக் குரல் போட்டியிலும் லக்சுமியே முதலிடத்தைப் பெற்றிருந்தார். வ்காபரோ சேர் அலக்ஸாந்தர் மக்கென்சி பாடசாலையின் மாணவியான லக்சுமி 13 வயது மட்டுமே நிரம்பியவர். திருமதி கமலாதேவி சண்முகலிங்கத்திடம் முறையாகச் சங்கீதம் கற்று வரும் இவர் வாசு சின்னராசாவிடம் நடனமும், கல்யாணி சுதர்சனிடம் வீணையும் கற்று வருகின்றார்.

கனடாவின் புகழ்பெற்ற வானம்பாடிகள் இசைக்குழுவின் இளைய பாடகியாக விளங்கும் இவர், 'கானக்குயில் 2005'ல் தங்கப் பதக்கம் பெற்ற வித்தகி. உலகத் தமிழர் மாணவர் அமைப்பு, இந்துமாமன்றம், தமிழ் இசைக் கலாமன்றம், இந்து சமயப் பேரவை மற்றும் ரொறன்ரோ கல்விச் சபையின் 'Peace Tree' ஆகியவைகளில் பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றவரான இவர், நீச்சல், பனிச்சறுக்கல், பலே நடனம், ஜாஸ் இசை ஆகியவைகளிலும் தேர்ச்சி பெற்ற சுறுசுறுப்பான மாணவி. கனடாவின் மூத்த தமிழர் வணிக நிறுவனமான 'ஓம்சிவா ரேடிங்' அதிபர் திரு. சுந்தரலிங்கம் (சுந்தரி) அவர்களின் இளைய சகோதரரின் புதல்வியே லக்சுமி.

கனடாவில் நடைபெற்ற இன்னிசைக்குரல் போட்டியில் முதலிடம் பெற்றமைக்கான பரிசை இங்கு நடைபெற்ற வைபவத்தில் திரு. வி. சொர்ணலிங்கத்திடமிருந்து லக்சுமி சிவனேஸ்வரலிங்கம் பெறுவதை மேலுள்ள ஒளிப்படத்தில் காணலாம். பல்கலைச் சிறுமியான இவர் சகல துறைகளிலும் வளர்ந்தோங்கி வீட்டுக்கும் தாய்நாட்டுக்கும் புகலிட மண்ணுக்கும் சிறப்புச் சேர்க்க வேண்டுமென 'தமிழர் தகவல்' வாழ்த்துகின்றது.

# குழந்தைகள் சிறப்பு மருத்துவர் உமேஷ் ராயருக்கு சிறப்பு விருது



ஒன்ராறியோவிலுள்ள பிராம்டனைச் சேர்ந்த குழந்தைகள் சிறப்பு மருத்துவருக்கு (டாக்டர்) உமேஷ் ராயர் அவர்களுக்கு மேன்மையான சமூக குழந்தைகள் சிறப்பு மருத்துவர் 2006 என்னும் விருது வழங்கப்பட்டுள்ளது.

அவருடைய 20 வருட குழந்தைகள் நல மருத்துவ சேவையில், அவர் கற்றது, குழந்தையின் தாய் சொல்வதை கவனமாக செவிமடுக்கும் தன்மை. அவர் கூற்றின்படி, தன்னைவிட குழந்தையைப் பற்றி முழுமையாக தாய்க்குத் தெரியும், அவர் குழந்தைக்கு ஏதாவது பிரச்சனை என்று சொன்னால் நிச்சயமாக பிரச்சனை இருக்கும் என்கிறார்.

அவருடைய செயலாளர் கூறுகையில், "டாக்டர் குழந்தைகளிடம் வித்தை புரிகிறார" என்கிறார். பயத்துடனும் அழுகையுடனும் வரும் குழந்தைகள், சிரிப்புடனும், சந்தோஷத்துடனும் செல்வதைத் தாம் காண்பதாகக் கூறுகிறார். அவருடைய 17 வயது மகனும் கூட கடந்த 7 வருடங்களாக Asperger's Syndrome எனும் ஒருவகை ஆயுரிச (Autism) நோய் சிகிச்சைக்காக டாக்டரின் கவனிப்பில் இருக்கிறார். அவர் மேலும் கூறுகையில், தன்னுடைய மகனின் வெளியுலகத் தொடர்புகளில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், 100% மாற்றமடைந்திருக்கிறார் எனவும் கூறுகிறார்.

ஒவ்வொரு நாளும் முழு நேரமும் நோயாளர்களுக்காக பதிவாகியிருக்கும் நிலையிலும், அது தமக்கு வேலையாகத் தோன்றுவதில்லை என்றும், குழந்தைகளுடன் செலவழிப்பது குதூகலமாயிருப்பதாகவும் கூறுகிறார். மேலும், ஆரம்ப நாட்களில் இரவுகளில் 6 அல்லது 7 தடவைகள் மருத்துவமனைக்கு அழைக்கப்படும் போது சிலவேளைகளில் அது கடினமாக மாறிவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு என்கிறார். அவருடைய மனைவியும் ஒரு டாக்டர் என்பதனால் புரிந்துணர்வுடன் செயல்படுவதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த ஜுன் மாதத்தில் கனடிய குழந்தைகள் நல மையத்தினால், மேன்மையான சமூக குழந்தைகள் சிறப்பு மருத்துவர் 2006 என்னும் விருது டாக்டர் ராயருக்கு வழங்கப்பட்டது.

மானிப்பாயைச் சேர்ந்தவரான டாக்டர் உமேஷ் ராயர் 1981ம் ஆண்டு தமது மருத்துவப் படிப்பை இலங்கையில் முடித்தவுடன், கனடிய குழந்தைகளுக்கான மருத்துவமனை (Hospital for Sick Children) அளித்த மாணவ சலுகையின் (Scholarship) மூலம் கனடாவிற்கு வந்தார். இருபத்தைந்து வருடங்கள் கடந்த நிலையில் தனது சமூகத்திற்கு மிகக் கூடியளவில் சேவையினை வழங்கி வருகிறார்.

கனடிய மருத்துவ, பல் மருத்துவ அபிவிருத்தி சபையின் (Canadian Medical Dental Development Association) உபதலைவராக விளங்குகிறார். இவ்வமைப்பானது தன்னார்வத் தொண்டர் சேவை அடிப்படையில் சுகாதார மருத்துவ துறையில் வேலை பார்ப்பவர்களைக் கொண்டதுடன், உலகம் முழுவதும் பேராபத்துகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதியுரைஞர், கலாநிதி அன்ரன் பாலசிங்கம் 1938 - 2006

## 'தேசத்தின் குரலுக்கு' ரொறன்ரோவில் இறுதி வணக்கம்

தேசத்தின் குரல் அமரர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இறுதி மரியாதைக் கூட்டம் ரொறன்ரோ மார்க்கம் செப்பேட் சந்திப்பில் அமைந்திருக்கும் சீனக் கலாச்சார மண்டபத்தில் கடந்த மாதம் 20ம் திகதி நடைபெற்றது. ஆயிரததுக்கும் அதிகமானோர் கலந்து 'பாலாண்ணா'வுக்கு மலரஞ்சலி செலுத்தி இறுதி வணக்கம் வழங்கினர். கனடிய ஆளுங் கட்சியான கன்சவேட்டிவ் கட்சியைச் சார்ந்த திரு ரிம் டொப்சன், திரு பில் ரெட்வுட் ஆகியோரும் லிபரல் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களாகிய திரு டெரிக் லீ, திரு ஜோன் கனீஸ், திரு ஜிம் கரிஜியானிஸ் போன்றவர்களும் ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் திரு ரேமன் சோ, மார்க்கம் நகரசபை உறுப்பினர் திரு லோகன் கணபதி ஆகியோரும் கலந்து கொண்டு தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் சேவையைப் பாராட்டினார்கள்.

லிபரல் கட்சியைச் சார்ந்த டெரிக் லீ பேசுகையில் எல்லா அரசியற் கட்சிப் பிரமுகர்களையும் அழைத்து இந்த நினைவு கூரல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அமைப்பாளர்கட்கு பாராட்டுத் தெரிவித்ததோடு அமரர் அன்ரன் பாலசிங்கத்தின் இழப்பு தமிழ் சமுதாயத்திற்கு ஏற்பட்ட இழப்பு மட்டுமல்ல அடக்கப்பட்ட எல்லா சமூகத்திற்கும் ஏன் முழு மானிடத்திற்குமே ஏற்பட்ட பேரிழப்பு என்றார்.



தமிழர் தகவல் பிரதம ஆசிரியரும் அரசியல் ஆய்வாளருமான திரு எஸ். திருச்செல்வம் பேசுகையில் பஞ்சபூதங்களின் சங்கமத்தில் எங்கள் தேசத்தின் குரல் இந்த வையகம் பூராகவும் நீக்கமற நிறைந்திருக்கும் என்றும், பாலாண்ணாவினதும் அடேல் அம்மையாரினதும் வாழ்க்கைச் சிறப்பைப் பற்றியும் பாலாண்ணாவின் இறுதிக் கிரியையகளின் போது அடேல் அம்மையார் வெள்ளைச் சேலை அணிந்து கண்ணீர் சிந்தியபடி இருந்தது அவருக்கு எமது தமிழ் பண்பாட்டில் இருக்கும் ஆழ்ந்த பற்றுதலைக் காட்டியது என்றும் இப்படியான ஒரு துணையைப் பெற பாலாண்ணா மாத்திரமல்ல உலகத் தமிழ் சமூகமே செய்த பாக்கியம் என்றார். அவர் மேலும் பேசுகையில் இந்திய உப கண்டத்திற்குக் கீழே தமிழ் அன்னைக்குப் பிறக்கப் போகும் ஈழம் என்னும் குழந்தை சுகப் பிரசவமா அல்லது ஆயுதங்களைப் பாவித்து சத்திர சிகிச்சை செய்து எடுக்க வேண்டிய பிரசவமா என்பதை இலங்கை அரசே தீர்மானிக்க வேண்டும் என்றார்.

அரசியல் விமர்சகராகிய திரு ராம் சிவதாசன் பேசுகையில் அமரர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழர்கட்கும் மானிடத்திற்கும் எத்தனை பெரிய சேவைகளையும் சாதனைகளையும் செய்த போதும் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் தொடர்ந்தும் காரியங்களை ஆற்றி வந்தார் என்றார். தமிழ்ப் பிரமுகர்களாகிய கலாநிதி இலகுப்பிள்ளை, திரு ராம் செல்வராஜா, திரு யோகராஜா, திரு அன்ரன் பிலிப் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

தமிழ் இளையோர் சார்பாக பார்த்தி கந்தவேள் பேசுகையில் கனடா தேசம் பொருட்களை ஏற்றுமதி செய்வதுபோல் மனித உரிமை மதிக்கும் தன்மையை சிறுபான்மையினரின் சமநீதி, தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை, சமஷ்டி அரசியல் முறை போன்றவற்றை மற்றைய நாடுகட்கு குறிப்பாக இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்றும் அங்கிருந்த பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளைப் பார்த்து கோரிக்கை விடுத்தார்.

லிபரல் கட்சியைச் சார்ந்த டெரிக் லீ பேசுகையில் எல்லா அரசியற் கட்சிப் பிரமுகர்களையும் அழைத்து இந்த நினைவு கூரல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அமைப்பாளர்கட்கு பாராட்டுத் தெரிவித்ததோடு அமரர் அன்ரன் பாலசிங்கத்தின் இழப்பு தமிழ் சமுதாயத்திற்கு ஏற்பட்ட இழப்பு மட்டுமல்ல அடக்கப்பட்ட எல்லா சமூகத்திற்கும் ஏன் முழு மானிடத்திற்குமே ஏற்பட்ட பேரிழப்பு என்றார். இந்த நிகழ்வினை மார்க்கம் கல்விச்சபை உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்பட்ட நீதன் சண்முகநாதனும் பல்கலைக்கழக மாணவியான சுதாமதியும் முறையே ஆங்கிலத்திலும் தமிழிலும் நெறிப்படுத்தினர்.

(நன்றி: ஈழநாதம் இணையத்தளம்)

## Statement by the Hon. Jim Karygiannis, Member of Parliament for Scarborough-Agincourt

"I would like to express my sorrow at the news of the death of Mr. Anton Balasingham, chief peace negotiator for the Liberation Tigers of Tamil Eelam on December 14, 2006. I wish to extend my sympathies to the family of Mr. Balasingham and to the Canadian Tamil community. My thoughts and prayers are with you.

A former journalist, Mr. Balasingham devoted over twenty-five years of his life to the pursuit of peace with justice, to bring an end to the protracted civil war in Sri Lanka. Under his guidance the Tamil Tigers entered into several rounds of successful peace talks with the Government of Sri Lanka, all brokered by Norway.

This respected man of peace will be remembered for his wisdom and vision."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Voice of the Nation' Dr. Anton Balasingham மதியுை
# 'தேசத்தின் குரலின்' வித்துடல் இறுதிப்ப














## Final Respect to the 'V

Tamil-Canadians gathered to pay their final re
LTTE's chief negotiator and theoretician on the
numbering in the thousands, gathered to place fl
at a memorial of Dr. Balasingham . Several speak
ious experiences, speaking on Mr. Balasinghan
Tamil people's suffering, as well as to his gre
Members of Parliament, John Cannis, Jim Ka
crowd as well. Mr. Karygiannis encouraged the
the political process and continue the work of
cated to the audience that Mr. Balasingham lef
undertake". Toronto city councilor Raymond C
fering of the Tamils, and related to similar expe
years ago. The Conservative Party of Canada, th
on behalf by candidates of record, Tim Dobson.
Mr. Balasingham's role in the Peace Process, as
struggle and suffering of the Tamil people
Elagupillai, Thiru S. Thiruchelvam, Tam
Shanmugarajah, Logan Kanapathy, all promi
memorial service was conducted from 6 – 9 p.
Toronto, Ontario, Canada. (Courtesy: TamilCan



ஒளிப்படங்கள்: பொன். பாலராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ுரைஞர், கலாநிதி அன்ரன் பாலசிங்கம் 1938 - 2006

# பயண நினைவு வணக்கம் - ரொறன்ரோ






## e 'Voice of the Nation'

final respects for Dr. Anton Balasingham, the on the day of his funeral in England. Mourners, place flowers, symbolic of their deep reverence, al speakers addressed the audience, relating var- ingham's contribution to the alleviation of the his great political intellect and stature. Liberal im Karygiannis, and Derek Lee addressed the ged the Eelam Tamil Diaspora to participate in ork of Mr. Balasingham. Mr. Cannis communi- am left a "challenge for the Tamil Diaspora to ond Cho spoke out about the long standing suf- ar experiences the Korean people underwent 30 nada, the current ruling government, was spoken obson. Mr. Dobson spoke on the significance of cess, as well as his awareness of the continuing eople of Sri Lanka. Speakers included Dr. Tam Sivathasan, Anton Philip, Neethan prominent Tamil community members. The – 9 p.m. at the Chinese Community Centre in milCanadian - December 22, 2006)











ஒளிப்படங்கள்: பிரான்சிஸ் ராதா- ஏ1 கொழும்பு ஸ்ரூடியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கலைமன்றத்தின் இரண்டாவது ஆண்டு 'நிருத்த நிறைஞர்' பட்டமளிப்பு விழா

ஒளிப்படங்கள்: பிரான்சிஸ் ராதா, ஏ1 கொழும்பு ஸ்.ரூடியோ










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொறன்ரோ
# தமிழ் இளையோரின்
# வீரவணக்க நிகழ்வு







யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

THE LAW OFFICES OF
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC

TEL: 416 265 3456
FAX: 416 265-2770
2100 ELLESMERE ROAD, SUITE 202, SCARBOROUGH ON M1H 3B7 (MARKHAM & ELLESMERE)

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

REAL ESTATE LAW
RESIDENTIAL &
COMMERCIAL
BUSINESS LAW



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் பேரவை நடத்திய ஆழிப்பேரலை இரண்டாவதாண்டு நினைவு நிகழ்வு





ஆழிப்பேரலை இரண்டாவதாண்டு நினைவு நிகழ்வினைக் கனடிய தமிழர் பேரவை கடந்த மாதம் 27 திகதி ஏஜக்ஸ் நகர சமூக மண்டபத்தில் நடத்தியது. இலங்கையில் தமிழர் பாரம்பரிய பகுதிகளில் ஆழிப்பேரலை ஏற்படுத்திய பாதிப்பினை சிறீலங்கா அரசு பாராமுகமாக இருப்பதையும் இப்பகுதிகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதையும் இங்கு உரையாற்றிய பலரும் சுட்டிக்காட்டினர். கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன் மக்மில்லன், ஜிம் கரியானிஸ், மார்க் ஹொலன்ட், ஒன்ராறியோ மாகாண கல்வி அமைச்சர் கத்லின் வைன், பிக்கரிங்-ஏஜக்ஸ் நகரசபைப் பிரதிநிதிகளும் முக்கியமான உரைகளை நிகழ்த்தினர். இவர்களுடன் கனடிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. குணநாதன், தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சந்திரகாந்தன், தமிழ்ப் படைப்பாளிகள் கழகத் தலைவர் திரு. வே. தங்கவேலு ஆகியோர் உட்பட தமிழர் சமூகப் பிரமுகர்களும் இளையோர் அமைப்பின் பிரதிநிதிகளும் இங்கு உரையாற்றினர். (ஒளிப்படங்கள்: பொன். பாலராஜன்)









FUTURE WAY

FINANCIAL SERVICE INC.

**Are you tired of paying too much for our insurance?**

- Mortgage Insurance ஈட்டுக்கடன் காப்புறுதி
- Permanent Life Insurance நிரந்தர ஆயுட்காப்புறுதி (10, 20 வருடத்தில் கட்டி முடிக்கலாம்)
- Critical Illness கடுமையான நோய் வருமுன் காக்கும் காப்புறுதி (வாழும் போதே காப்புறுதியின் பயனைப் பெறலாம்)
- Non Medical Life Insurance வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதி
- Travel Insurance பிரயாணக் காப்புறுதி
- R.R.S.P. ஓய்வூதிய சேமிப்புத் திட்டம்
- R.E.S.P. சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் (அரச மானியம் 20%-40% + எமது நிறுவனம் வழங்கும் 15% மேலதிக கொடுப்பனவு)

பல்வேறு முன்னணி நிறுவனங்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட மிகக்குறைந்த கட்டணத்தில் உங்கள் குடும்ப வருமானத்திற்கேற்ப காப்புறுதி செய்து தரப்படும்

**10 Years Term**

| | $100,000 | | $250,000 | | $500,000 | |
|---|---|---|---|---|---|---|
| Age | Male | Female | Male | Female | Male | Female |
| 25 | 11.34 | 8.82 | 14.85 | 11.25 | 22.95 | 11.70 |
| 30 | 11.61 | 9.09 | 14.85 | 11.70 | 23.13 | 16.98 |
| 35 | 11.88 | 9.90 | 15.30 | 13.05 | 24.75 | 20.25 |
| 40 | 13.95 | 11.79 | 19.35 | 16.88 | 31.05 | 24.95 |
| 45 | 17.95 | 14.85 | 26.55 | 21.05 | 42.75 | 31.59 |
| 50 | 24.75 | 18.91 | 38.70 | 28.60 | 65.48 | 44.87 |

7100 Woodbine Ave., Suite 101, Markham, ON (Steele and Woodbine)

**Direct: 416.803.6500**

RBC Insurance  Industrial Alliance  Canada Life  Manulife Financial

and more companies



*Investment, Insurance & Financial Advisor*

**Haran Thava**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

# ஸ்காபரோ முதுதமிழர் ஒன்றுகூடல்









ஸ்காபரோ முதுதமிழர் சங்கத்தின் நத்தார் தின விழாவும், 'சங்கத்தின் கௌரவிப்பு 2006' வைபவமும் கடந்த மார்கழி 18ம் திகதி திங்கட்கிழமை 1315 நீல்சன் வீதியில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தின் விருந்துபசார மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு முத்தையா தேவராஜா தலைமையில் நடைபெற்றது. மதிய போசனத்துடன் இணைந்த வைபவமாக அந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது.

ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் டாக்டர் றேய்மன்ட் சோ, போதகர் அருட்திரு. ஐசாக் செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியதோடு 75வது வயதை பூர்த்தி செய்த எட்டு சங்க உறுப்பினர்களுக்கு பதக்கம் அணிவித்து விழாவை சிறப்பித்தனர். இந்த வைபவத்தின் போது ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் டாக்டர் றேய்மன்ட் சோவிற்கும் சங்கத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**


2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**



# UNEMPLOYED?

**Are You Receiving EI...?**
**Contact Us for HRDC Funding Details**

*Employers need skilled people in*

- Early Childcare Assistant (ECA)
- Computerized Accounting
- A+ (Computer Assembly & Repair)
- Network Engineering
- Personal Support Worker (PSW)
- Business Administration
- QA/Software Tester

**job** ready in 3 -6 months

**Kennedy & Sheppard**
(North East Corner)
301 - 2347 Kennedy Road
Tel: **416-321-9911**

**Computek College** of
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

**Kennedy & Eglinton**
(Above Public Library)
248 - 2390 Eglinton Ave. E.
Tel: **416-285-9941**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சபேசன்ஸ்

விருது பெற்ற
தொழிற்றுறை
நிபுணர்

வீடு திருத்தம்
மற்றும்
நிலக் கம்பளம்
பொருத்தும்
வேலைகளில்
தன்னிகரற்றவர்!

எந்தப் பணியையும்
குறித்த நேரத்துள்
செய்து முடிப்பதில்
வல்லுனர்!

ஒருமுறை
தொடர்பு கொண்டால்
உண்மை தெரியும்!
பலன் புரியும்!

416 605 1990
416 605 1990

## சாயி பஜனைகள்

### ஸ்காபரோ

ஸ்காபரோ சாயி சமித்தியினரால் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஸ்காபரோ வுபர்ன் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரை சாயி பஜனை நடத்தப்பட்டு வருகின்றது. இதே நாட்களில் கல்வி வட்டத்தினரின் வகுப்புகள் பிற்பகல் 6:00 மணி முதல் 7:00 மணி வரை நடைபெறும்.
பாலவிஹாஸ் வகுப்புகள் 5 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 4:15மணி முதல் 5"30 மணி வரையும் நடைபெறும்.

### வெலஸ்லி

ரொறன்ரோ பார்லிமென்ட்/வெலஸ்லியில் 240 தொடர்மாடிக் கட்டிடத்தின் நிலக்கீழ் அறையில் சாயி பஜனை நடைபெறுகின்றது. நாள், நேரம் பற்றிய விபரங்களுக்கு விபரங்களுக்கு (416) 944-0197 இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

### மிஸிஸாகா

மிஸிஸாகா சாயி சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை இரவு எட்டு மணி முதல் ஒன்பதரை மணி வரை பஜனையும், தியான வழிபாடும் மிஸிஸாகாவில் 1447 அலக்ஸான்ட்ரா அவினியுவில் அமைந்துள்ள ஸ்ரீசத்ய சாயி பாபா நிலையத்தில் நடைபெறுகின்றது. சிறுவர்களுக்கு பாலவிகாஷ் சமயபாடப் போதனைகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் Erindal campusல் சபையினரால் நடத்தப்படுகின்றது. விபரங்களுக்கு (905) 274-8886 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### லான்ட்ஸ்ரவுண்

லான்ட்ஸ்ரவுண் ஸ்ரீ சத்ய சாயி நிலையத்தில் பிரதி வியாழன் மாலை 7:30 மணி தொடக்கம் 8:30 மணி வரை பஜனைகள் நடைபெறும். அதேதினம் மாலை 6:45 மணி முதல் 7:25 வரை கல்வி வட்டமும் பிரதி செவ்வாய்க்கிழமை மாலை ஆறு மணி தொடக்கம் ஏழு மணி வரை பாலவிகாஷ் எனப்படும் சிறுவர் சமய வகுப்பும் நடைபெறும். லான்ட்ஸ்ரவுண் தமிழர் கூட்டுறவு இல்ல 3ம் மாடி மண்டபத்தில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

### டொன்மில்ஸ்

டொன்மில்ஸ் சாயி சமித்தியினரால் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை பிளெமிங்டன் பார்க் (29 St.Dennis Drive) நூலக மண்டபத்தில் காலை 9:15 மணி முதல் 10:30 மணி வரையும் சிறுவர்களுக்கான (நான்கு வயது முதல் பதினாறு வயது வரை) பாலவிகாஷ் வகுப்புகளும், காலை பதினொரு மணி முதல் 12:30 மணி வரையும் சாயி பஜனையும் நடத்தப்படுகின்றது விபரங்களுக்கு 416-750-0128 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### எற்றோபிக்கோ

எற்றோபிக்கோவில் 2400 Finch West வீதியில் அமைந்துள்ள திருச்செந்தூர் முருகன் ஆலய மண்டபத்தில் சாயி பஜனை பிரதி வெள்ளி தோறும் பிற்பகல் 7:30 மணி முதல் 9:00 மணி வரை நடைபெறுகின்றது. விபரங்களுக்கு 416-748-7254 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### மார்க்கம்-எக்லின்டன்

மார்க்கம்-எக்லின்டன் சாயி சேவாவினரால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பிற்பகல் 7.45 மணிமுதல் 8.45 மணிவரை Cedar Driveல் அமைந்துள்ள Cedar Drive Junior Public பாடசாலையின் ஜிம் அரங்கில் நடைபெறுகின்றது. விபரங்களுக்கு 416-267-1246 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

### ரொறன்ரோ கிழக்கு

ரொறன்ரோ கிழக்கு சாயி சமிதியினரால் பிரதி ஞாயிறு பிற்பகல் 6 மணி முதல் 7.30 வரை பஜனையும், தியான வழிபாடும் 20 Canadian Road இல் அமைந்துள்ள Ellesmere Community Recreation Centre மண்டபத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. சிறுவர்களுக்கான பால விகாஸ் போதனா வகுப்புகளும் ஞாயிறு மாலை 4.45 முதல் 6 மணி வரை நடத்தப்படுகின்றது. விபரங்களுக்கு - 905 944 1611

### ஸ்காபரோ
### பார்மஸி - பிஞ்ச்

ஸ்காபரோ பிறைடல் ரவுன் சாயி சமித்தியினரால் பிரதி ஞாயிறு தோறும் பிற்பகல் 5.00 - 6.15 வரை பாலவிகாஸ் வகுப்புகளும் சாயி இளைஞர்களுக்கான வகுப்புகளும், 5.45 - 6.15 வரை கல்வி வட்ட வகுப்புகளும், 6.30 - 7.30 வரை சாயி பஜனையும் தியான வழிபாடும் 3150 பார்மஸி அவெனியுவில் அமைந்துள்ள Ephipany of our Lord கத்தோலிக்க பாடசாலையின் ஜிம் அரங்கினில் நடத்தப்படுகின்றது. மேலதிக தொடர்புகளுக்கு (416) 431-3279 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





போனதும் உண்டு. ஆனால் அந்த உத்தமர்கள் வாய் திறக்க வேண்டுமே. ஒரு சுடு சொல் அவர்களது வாயில் வரவேண்டுமே. அவர்களின் கனிவு நிறைந்த பேச்சும் நட்புறவான நடவடிக்கைகளும் எமக்கு பாடசாலையின் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதனையே முக்கியம் என எண்ண வைத்தன.

முதலாவதாக மகாஜனா மைதானம் மழைகாலத்தில் ஒரு பெரிய குளம் போலக் காட்சி தரும் நிலையினை மாற்றுவதே. இதற்குக் காரணம், மகாஜனாவின் விளையாட்டு மைதானம் பாடசாலையில் வெளியே உள்ள ஒழுங்கையிலும் பதிவாக இருந்தமையே. ஆகவே மழைக் காலங்களில் ஒழுங்கையினால் ஓடுகின்ற வெள்ளம் மகாஜனாவின் உள்ளே வந்து மைதானத்தை நிரப்பி விடும். சில காலங்களில் ஒரு அடி உயரத்திற்கும் மேலாக வெள்ளம் தேங்கி நிற்பதும் உண்டு. மழை காலம் உதைபந்தாட்டக் காலம் என்பதால் எமது உதைபந்தாட்டப் பயிற்சிக்குப் பெரிதும் தடையாக இருந்ததோடல்லாமல் ஆசிரியர்கள் மழை காலங்களில் வகுப்புகட்குச் செல்வதற்குக் கூட கணிசமான அளவு கஷ்டமாகவே இருந்தது. ஆகவே இந்த வேலையே முன்னுரிமை பெற்றது. மாணவர்கள் ஊடாகவே நிதி சேகரித்தோம். அப்பொழுது நான் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக இருந்தேன். நிதி சேகரிப்புக்கு அமைக்கப்பட்ட குழுவினுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டேன். மாணவர் மிகவும் உற்சாகமாகச் செயற்பட்டனர். மிகச் சுலபமாக வேலை முடிந்தது. ஒரு பழைய மாணவர் தேக்க மரங்களைத் தந்து உதவினார். இன்று அவை பாரிய மரங்களாக மைதானத்தின் இரு புறங்களிலும் ஓங்கி வளர்ந்து நிற்கின்றன.

வெள்ளம் உள்ளே வருவது நின்றது. வெள்ளம் போல் மாணவர் வருவது தொடங்கிற்று.

நான் கிறிஸ்தவக் கல்லூரியில் விலங்கியல் சிறப்புப் பாடநெறி கற்ற சமயத்தில் மலையகத் தமிழரான திரு இரா சிவலிங்கம் அவர்கள் பொருளாதாரத்தில் சிறப்புப் பாடநெறி கற்றுக் கொண்டிருந்தார். எம் இருவருக்கும் நெருக்கமான தொடர்பு இருந்தது. பட்டப்படிப்பு முடிந்ததும் அவர் ஹற்றன் நகர் ஹைலண்ட் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றினார். அவர் வருடா வருடம் மலையகத்தில் இருந்து மேற்படிப்பு படிக்க விரும்புகின்ற மாணவர்களை அழைத்து வந்து எமது பாடசாலையில் சேர்த்துவிட்டுச் செல்வார். இதனால் அம்மாணவர் களுக்கு அனுகூலம் ஏற்பட்டது உண்மை எனினும் மகாஜனாவுக்கும் அதிக இலாபம் இருந்ததை ஏற்றுக் கொள்ளவே வேண்டும். அங்கே ஹொக்கி விளையாட்டு பிரபலமானது. உதைபந்தாட்டமும் அவர்கள் விரும்பி விளையாடும் விளையாட்டு. இதன் காரணமாக எமது உதைபந்தாட்ட அணியில் சிறந்த வீரர்கள் வந்து சேர்வதற்கும் உதவிற்று. யாழ் பாட-சாலைகள் புதிதாக ஹொக்கி விளையாட்டுச் சங்கம் ஒன்றினை அமைத்தன. அதன் பாட-சாலைகளுக்கிடையேயான ஹொக்கிப் போட்டிகளில் மகாஜனா முன்னணியில் இருப்பதற்கு மலையகத்தில் இருந்து வந்த மாணவர்கள் பெரிதும் உதவினார்கள் என்பதில் ஐயமில்லை.

கிழக்கு மாகாணமும் மகாஜனாவின் பக்கம் நிறையவே பார்வையைச் செலுத்தியது. இன்றைய பாராளுமன்ற அங்கத்தவர் இரா.சம்பந்தனின் சகோதரர்கள் அங்கேயே கல்வி கற்றனர். பின்னர் சட்டக்கல்லூரி சென்று அங்கு பேச்சுப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற விக்னேஸ்வரன் மகாஜனாவின் சார்பாக ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் பரிசுகள் பெற்றதுடன் சிறந்த ஆங்கில நாடக நடிகராகவும் இருந்தார். கிரிக்கட் விளையாட்டிலும் சிறந்தவராக இருந்தார். மேலும் பலர் வந்தனர் திருகோணமலையில் இருந்து வந்தவர்களால் எமது உதைபந்தாட்ட அணி மேலும் தகைமை பெற்றது. தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட காசிம் அவர்களும் என்னோடு கற்றவர். ஆகவே அவரது பிள்ளைகள் மாத்திரமல்லாமல் வேறு பல முஸ்லிம் சமூகத்தவர்கள் தமது பார்வையை மகாஜனாவின் பக்கம் செலுத்த மகாஜனா பல்சமயத்தவரும் சங்கமித்த ஒரு கல்விக் கூடமாகியது.


பல்சமயத்தவரும் மகாஜனாவில் கல்வி கற்றாலும், அதிபர் மிக்க கடவுள் பக்தியுடைய சைவர். காலையிலே தேவாரத்துடன் தான் பாடசாலை ஆரம்பிக்கும். பாடசாலைக்கென ஒரு ஆலயம் அமைக்க வேண்டுமென்பது அவரது நீண்ட நாள் ஆசை. எனவே அதனைச் செயற்படுத்தி பொன் விழா சமயத்தில் கும்பாபிசேகமும் செய்து வைத்தார். பரமேஸ்வரா, இராமநாதன் கல்லூரிகளைத் தவிர முதல் முதலாகப் பாடசாலையிலே ஆலயம் அமைத்தது மகாஜனாக் கல்லூரியாகத்தான் இருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். இது தவறாகவும் இருக்கலாம். ஆலயத்தில் எழுந்தருளிய இறைவன் பெயர் சிவகாமி சமேத ஆனந்த நடராசர். ஆலயம் தோன்றியமையால் பாடசாலை நாளாந்த நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டது. காலையில் பூசை செய்வதற்கு ஒரு அந்தணர் நியமிக்கப்பட்டார். அவர் 9:00 மணிக்குப் பூசையை ஆரம்பிப்பார். அதன் முடிவிலே தேவாரம் நடைபெறும். ஆகவே எல்லா மாணவர்களும் அச்சமயத்தில் ஆலயத்தின் முன்னே நின்று வணங்குவார்கள். மறுசமயத்தவர் வெவ்வேறு சமயத்தவர். அந்நேரத்தில் தனித்தனியே பிரார்த்தனை செய்ய அறைகள் ஒதுக்கப்பட்டன. எல்லா மதத்தவர்களினதும் புனிதம் பேணப்பட்டது. ஆனால் விடுதிச் சாலையிலோ உணவு விற்பனைக் கூடத்திலோ மாமிசம் இல்லை. கனடா வந்த நான் திருமதி கனகேஸ் நடராசாவின் உதவியால் கல்விச் சபையுள் புகமுடிந்தது. முதலில் சென்றது யோர்க்டேல் இரண்டாம் நிலைப் பாடசாலை. அங்கே உள்ள உப அதிபர் என்னை

(மார்ச் இதழிலும் தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் இராமலிங்கம் பத்மநாதன்
## மனிதநேயப் பண்பாளர்



நல்லூர் குமார வீதியில், இராமலிங்கம்-தங்கரத்தினம் தம்பதியினரின் இரண்டாவது மகவாக 1930ஆம் ஆண்டு செப்டம்பர் 22இல் அவதரித்தவர் பத்மநாதன் அவர்கள். இப்பூவுலகில் கண்திறந்த ஒன்றரை வருடங்களில் தந்தையாரைப் பறிகொடுத்த இவர் தாயாரின் அன்பு அரவணைப்பிலும், தமையனாரின் பாசப் பிணைப்பிலும் இளவயது வாழ்க்கையை ஆரம்பிக்க நேர்ந்தது. ஐந்தாம் வகுப்பு வரை கல்வியை ஸ்ரான்லி கல்லூரியில் (கனகரத்தினம் ம.வி.) முடித்த பின்னர், மேற்கல்வியை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் மேற்கொண்டார்.

ஆரம்பத்தில், மலேரியா தடுப்பு இயக்கக் கண்காணிப்பாளராக பொலன்னறுவ, மாத்தளை, பதுளை, கொஸ்லாந்த போன்ற கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றினார். எல்லோரையும் சமனாக மதித்து, எப்போதும் உதவும் மனப்பான்மை கொண்டவராக இவர் விளங்கியதால் சகல பணித்தலங்களிலும் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கு நிறைந்தவராக விளங்கினார். பாடசாலை நாட்களிலிருந்தே உதைபந்தாட்டம், கிரிக்கெட் ஆகிய விளையாட்டுகளில் சிறந்தவராகவும் நல்லாற்றல் மிக்கவராகவும் இருந்தார்.

1957ஆம் ஆண்டில் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியில் உறவினரான சுவர்ணபூபதியைத் திருமணம் புரிந்தார். இல்லற சாகரத்தில் நான்கு புத்திரர்களை இவர்கள் பெற்றனர். சுவர்ணபூபதி அம்மையார் கணவரின் விருப்பறிந்து இயங்குபவர். பத்திக்கு ஏற்ற பதிவிரதை. அற்புதமான ஓவியர். தூரிகையினால் கலைவண்ணம் காட்டுபவர், கைவேலைப்பாடுகளில் கைவண்ணத் தாய். இவர்களின் புதல்வர்கள் கரிகரன், சுதாகரன், சசிகரன், வித்தியாகரன் ஆகியோர். கடைசி மகன் வித்தியாகரன் 1987இல் வீரமரணம் எய்தினார்.

திரு. பத்மநாதன் அவர்கள் பின்னர் இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்து, தமிழர் தாயகத்தின் தலைநகராகப் போற்றப்படும் திருகோணமலையிலுள்ள தம்பலகாமம், குச்சவெளி, கிண்ணியா ஆகிய இடங்களில் தொடர்ச்சியாகப் பல வருடங்கள் பணியாற்றினார். தமது திறமையாலும் கடின உழைப்பாலும் படிப்படியாக உயர்வு பெற்றார். இறுதியில் திருமலை கச்சேரியில் (காணிப் பிரிவு) நிர்வாக உதவியாளரானார். முதல் ஆளாக அலுவலகம் சென்று, இருட்டிய பிறகும் பணியைப் புரிந்து, அனைவரிடமும் செல்வாக்குப் பெற்றவராகத் திகழ்ந்தார்.

பிள்ளைகளின் கல்வியில் அக்கறை, சுகவீனமுற்றிருந்த மனைவியைப் பராமரிப்பது, நாளாந்த கடமைகளைப் பார்ப்பது, என்று தனது கடமைகளில் என்றும் சிரத்தையுடன் இருந்தவர். எப்போதும் முகமலர்ச்சியுடன் மற்றவர்களுக்கு உதவும் சிந்தை கொண்டவர். சரீர, பண மற்றும் உத்தியோக ரீதியான உதவிகளை இறுதிக்காலம் வரை செய்து வந்தவர். தாயக பூமியின் நிர்வாக உட்கட்டுமான அமைப்பு வேலைகளில் தமது அனுபவத்தினைப் பங்காக்கினார். தாயக விடுதலையைத் தமது பேச்சிலும் மூச்சிலும் சுமந்து திரிந்த ஒருவர்.

எவ்வேளையிலும் மற்றவர்களுக்குச் சிரமம் கொடுக்காது தாமே தன் வேலைகளைக் கவனித்து மற்றவர் தேவையறிந்து நடப்பதில் அவருக்கு நிகர் அவரே! உடல் நலம் குன்றிய வேளையிலும் அடுத்தவருக்கு உதவுவதை மகிழ்ச்சியுடன் மேற்கொண்டு வந்தார். சிறு விபத்துக்கு உள்ளாகி வைத்தியசாலையில் இருந்த வேளையில் ஓர் அறுவைச் சிகிச்சையின் பின்னர் நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பலனளிக்காததால் இவ்வுலக வாழ்வை நீக்கி, கடந்த டிசம்பர் 1ஆம் திகதி மொன்றியலில் இறையுடன் இணைந்து விட்டார்.

பிள்ளைகள்: ஹரி- 514 737 8259, சுதா- 514 581 8858, சசி- 905 285 0721

கனடாவாழ் ஈழத்தமிழ் மக்களுக்காக முதன்முதலாக கனடாவில் ஆரம்பிக்கப்பட்டு தனித்துவம் பெற்ற முதியோர் பராமரிப்பு நிலையம்

HELPING HANDS SENIOR CARE

நிர்வாகத்தில் ஒரு

"விலா கருணா"

HELPING HANDS
SENIOR CARE



இந்திராணி நாகேந்திரம்

(416) 756-2895
(416) 200-6971
Fax: 416-756-3182
730 Brimley Road
Scarborough, ON M1J 1C2
helpinghand@bellnet.ca
www.hhseniorcare.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



அனலைதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

**திருமதி தவராஜா சரஸ்வதி** அவர்கள்

21-12-2006 இல் வியாழக்கிழமை பிற்பகல் கனடாவில் இறைபதமெய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சிவமகாதேவி, தையல்முத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தவராஜாவின் ஆருயிர் மனைவியும், இராசம்மா (அனலைதீவு) அன்னம்மா (கிளிநொச்சி), கணேசன் (செழியன் இந்தியா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற மோகனதாஸ் (முன்னாள் லாவண்யா வீடியோ உரிமையாளர்) சுகந்தி, வசந்தி (பிரான்ஸ்) சாந்தி, விமல்தாஸ் (Maasters Buy and Sell) உரிமையாளர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் வினோதினி, கிருஷ்ணபிள்ளை, திருச்செல்வம் (பிரான்ஸ்) உதயகுமார், கவிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், பிருந்தா (University of Toronto) லாவண்யா, கௌசிகன், சிந்துஜா (University of Toronto) ஜீவிதன், கங்கா, (University of France), கஜன், கஜரூபன், சுஜிதா (Mc Master University) சுஜிராஜ், அனோஜனா ஆகியோரின் பிரியமுள்ள பேத்தியாரும், காலஞ்சென்றவர்களான சிவகுரு, சதாசிவம், மகேஸ்வரி, இராஜேஸ்வரி (கனடா) மனோரஞ்சிதம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 23-12-2006 சனிக்கிழமை மிஸிஸ்ஸாகாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: சொ. கிருஷ்ணபிள்ளை - 905 755 0777 (மகள் மருமகன்)
த. விமலதாஸ் - 416 727 2325 (மகன்)

## பாடசாலையில் கல்வியை முறித்தால் சாரதி அனுமதி கிடையாது

பாடசாலை மாணவர் தமது கல்வியை 18 வயதுக்கு முன்னர் இடைநிறுத்துவார்களாயின், அவர்களது வாகன சாரதி அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்படுவதற்கென புதிதாக சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. இளம் வயதின ரிடையே அதிகரித்து வரும் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்துதலை குறைப்பதை யும், வேலை ஒன்றைப் பெறுவதற்கான குறைந்தபட்ச தகுதியாக தரம் 12 வரையாவது ஒவ்வொருவரும் கற்றிருத்தல் வேண்டுமென்பதையும் இச்சட்டம் மூலம் அடையலாம் என நம்பப்படுகிறது.

## மது பாவனையால் அதிக விபத்து மரணங்கள்

ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 1,000 கனடியர்கள், மதுபாவனை காரணமாக ஏற்படும் வாகன விபத்துகளினால் இறப்பதாகக் கனடிய புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இவ்வெண்ணிக்கையானது மொத்தமாக ஏற்படும் வீதி விபத்துகளினால் ஏற்படும் இறப்புகளின் தொகையில் மூன்றிலொரு பங்காகும். இதுவே நாட்டில் இறப்புகளை ஏற்படுத்தும் மிகப் பெரிய குற்றவியல் காரணமென பொலிஸார் கூறுகின்றனர்.

## நீர் தூவும் கருவிகள்

ரொறன்ரோ தீயணைப்புப் பிரிவினர் நகரம் முழுவதும் வீடுகளில் ஒவ்வொரு தளங்களிலும் நீர் தூவும் சிறுகருவிகளை (Sprinklers) இணைக்குமாறு கேட்டுள்ளனர். அதிகரித்து வரும் தீ விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்க்குமுகமாக அலுவலகக் கட்டிடங்களில் பதிக்கப்பெற்றிருக்கும் இவ்வகைக் கருவிகளை வீடுகளிலும் பொருத்துவது சாலச் சிறந்ததே.

**Ruban Pest Control**

**Complete Elemination of Roaches & Mice**

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்களில்
பூச்சி, எலிகள் தொல்லையா? கவலையை விடுங்கள்!

அறவே ஒழிக்க அழையுங்கள்.





Call: Kanthan

**Tel: 416 291 3997**

Houses, Apartments, Industrial, Commercial Roach Eliminator

No Spraying, No Smelling, No Moving



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். காந்தி எழுதும் தொடர்

# வெள்ளிப் பணம் (டாலர்) - 6

கடந்த இதழில் நுகர்வுப் பொருளுக்கான கடன்படுதலின் விளைவுகளைப் பார்த்தோம். தற்பொழுது நாம் கனடாவில் வாழும் வாழ்க்கைக்கும் தாயகத்தில் வாழ்ந்த வாழ்க்கைக்கும் பொருளாதார சிந்தனைகளுக்கும் வேறுபாடுகள் உண்டு. தாயகத்தில் நாம் ஒரு பொருளை வாங்குவதற்கு முன்பாக சேமிப்புக்களை மேற்கொண்டு அந்தச் சேமிப்பின் மூலம் ஒரு காணியையோ அல்லது ஒரு வீட்டினையோ கட்டுவோம். இங்கு அப்படிச் செய்ய முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. இங்கு அப்படிச் செய்யும் சாத்தியம் குறைவு என்பது வெளிப்படையான உண்மை.

எனவே கனடிய பொருளாதார அமைப்பில் கடன் பெறுவதும் உழைப்பதும் இரு சக்கர வண்டி போன்றது. இருப்பினும் பெற்ற கடனை திருப்பி செலுத்துகின்றபோதே இதன் தத்துவம் உண்மையாகின்றது.

பொதுவாகவே நாம் கடன் பெற்றுக் கொள்ளும் போது சில முக்கிய விடயங்களை கவனத்தில் கொள்வது புத்திசாலித்தனமாக அமையும்.

1. நாம் எதற்குக் கடன் பெறுகின்றோம்
2. நாம் பெற்றுக் கொள்ளப்போகும் கடனை எம்மால் திருப்பி செலுத்த முடியுமா?
3. எவ்வளவு காலத்துக்குள் இவற்றை செலுத்தி முடிப்போம்?
4. கடனுக்கு கொடுக்கப்படும் வட்டி வீதம் என்ன?
5. மாதாமாதம் திருப்பி செலுத்தும் தொகையில் எவ்வளவு தொகை வட்டியாகக் கொடுக்கப்படுகின்றது?

இந்த ஐந்து கேள்விகளுக்குமான பதில்கள் உங்களுக்குச் சாதகமாக அமைந்தால் கடன பெற்று வாழ்க்கையில் முன்னேற்றத்தினைக் காண முடியும். பொருளியல் ரீதியிலான அடிப்படை அறிவும், நிதானமாக சிந்தித்துச் செயற்படும் தன்மையும், கவர்ச்சியான விளம்பரங்களுக்கு அடிமைப்படாது பகுத்தறிவின் துணை கொண்டு வெள்ளிப் பணத்தினை சிக்கனமாக செலவு செய்து வாழுதல் கனடாவில் அவசியமாகின்றது.

பகுத்தறிவு என்பது இங்கு எது தேவை, எது தேவையற்றது என்பதனைச் சரியான முறையில் தீர்மானித்துக் கொள்ளுதல். எனக்கு அவசியமானதாக இருக்கும் ஒருபொருள் இன்னொருவருக்கு அவசியமற்றதாக இருக்கலாம். எனவே உங்கள் தேவைகளை நீங்களே சரியாக வரையறுத்துக் கொள்ளுங்கள்.

அடுத்தது, சிக்கனமாகச் செலவு செய்தல் என்பது. இது உலோபித்தனத்துக்கும் ஊதாரித்தனத்துக்கும் இடைப்பட்ட ஒரு விடயமாகும். மனிதனுடைய வாழ்வு முரண்பட்ட சிந்தனை ஓட்டங்களுக்குள் ஒரு உடன்பாட்டைக் காண்பதுதான்.

இந்த அடிப்படையில் முரண்பட்ட பொருளாதாரச் சிந்தனையோட்டத்தில் சரியான பாதையை தெரிந்தெடுத்து கடைப்பிடிப்பதில் தான் எமது பொருளாதார வெற்றி தோல்விகள் தங்கியுள்ளன.


P. Kayilasanathan

B.A (CEY) LLB (CEY)

BARRISTER & SOLICITOR



குற்றவியல் வழக்குகள், அகதிநிலை விசாரணைகள், மனிதாபிமான விண்ணப்பங்கள், வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் - விற்றல், குடும்ப வழக்குகள், வாகன விபத்து நஷ்டஈடு கோருதல்.

பொ. கயிலாசநாதன்

கனடிய பாரிஸ்டர்

2401 Eglinton Av. East, Suite # 302
(Eglinton/Kennedy)
Scarborough, ON
M1R 2M5

Tel.: 416-752 9561
Fax: 416-752 7262




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

905 501-0011



905 501-0011

திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகள் சேவைக்கும், திருமணத்திற்குத் தேவையான அனைத்து தேவைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

மண்டபம், முத்துமணவறை, மண்டப அலங்காரம், பூமாலை, சடைநாகம், தலைப்பாகை, தலைநகை, பூஜைப் பொருட்கள், சுத்த சைவ உணவு ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில் பெற எங்களை நாடுங்கள்.

மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா தேவஸ்தான
தொலைபேசி இலக்கம்: 905 405 0011

இந்துமத குரு, திருமணப் பதிவு அதிகாரி

**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்**

(Hindu Priest & Registrar of Marriages)

**5556 Whistler Crescent, Mississauga, Ontario.**

**தொலைபேசி: 905-501-0011**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எஸ். ஜெகதீசன் எழுதுவது

## புகை பெரும் பகை

வருடந்தோறும் சுமார் 425 வரையிலானவர்கள் புகைபிடிக்காமல் புகையின் தாக்கத்தால் ஒன்ராறியோவில் பரிதாபகரமாக மரணிக்கிறார்கள். அடுத்தவர் வெளிவிடும் புகையை உள்ளிழுப்பதால் வரும் பாதிப்பே இதற்குக் காரணம் என்கின்றது ஓர் ஆய்வு அறிக்கை.

ஆயிரக் கணக்கானவர்கள் சுவாசப் புற்று நோய்க்குள்ளாவதற்கும், செவிப்புலன் செயலற்றுப் போவதற்கும் கருச்சிதைவால் உருக்குலைவதற்கும் இதுவே தான் காரணமாகக் காட்டப்படுகின்றது.

பற்றி எரியும் சிகரெட் தீயில் பற்றுடனே தீயும் புகை பிடிப்பவர்களை விட்டுவிடுவோம். இளமைப் பொழுது இன்பத்திற்காக இதயத்தை ஈயும் அவர்களைப் பீடிக்கும் வியாதிகளைச் சொல்லி மாளாது.

பல கட்டிடங்கள் புகைபிடிப்பவர்களை இப்பொழுது வெளியே ஊதித்தள்ள ஆரம்பித்துள்ளன.மதுச்சாலைகளுக்குள் தம்மைச் சூடேற்றும் பலர் வெளியே வீதிக்கு வந்து நடுங்கும் குளிரில் கைகளை உராவியபடியே 'புகைவதையும்' தற்பொழுது அவதானிக்க முடிகின்றது.

தவிர தொழிற்சாலைகள் - கடைத் தொகுதிகள் எனப் பல பொது இடங்கள் புகைப்பிடித்தல் தணிக்கையை கண்டிப்பாக அமுல்படுத்திப் புகைப் பிடிப்பவர்களை கசக்கி வெளியே எறிகின்றன. இத்திட்டம் விரைவிலேயே உங்கள் வீட்டு வாசலுக்கும் புகை போடவுள்ளது.

2006ம் ஆண்டு அக்டோபர் முதலாம் திகதி முதல் வின்னிபெக்கில் சுமார் 60 தொடர்மாடி கட்டிடங்களில் புகை பிடிக்க அனுமதிப்பதில்லை என்பது உத்தியோக பூர்வமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் (பெப்ரவரி) முதல் வன்கூவரிலும் பல கட்டிடங்கள் புகைமண்டலத்தை தடைசெய்யவுள்ளன.

சுகாதாரச் சீர்கேடு இதற்கு முக்கிய காரணி எனக் கூறப்பட்டாலும் தடித்த நிலவிரிப்புகளை சுத்தம் செய்வது, சுவர்களுக்கு வர்ணம் தீட்டுவது, எரிந்த பகுதிகளை சீரமைப்பது என்பனவற்றின் செலவுகளையும் காப்புறுதியையும் கணிசமான அளவு கட்டுப்படுத்தலாம் என்றும் சொல்லப்படுகின்றது.

கூடிய சீக்கிரமே ரொறன்ரோவும் இதனைப் பின்பற்றும் என எதிர்பார்க்கலாம்.

புகைபிடிக்காதோர் உரிமைக் கழகம் - NON SMOKERS' RIGHTS ASSOCIATION - என்ற அமைப்பு இதற்காக முனைப்புடன் செயல்படுகின்றது. கிடைக்கும் சந்தர்ப்பங்களை நன்கு பற்ற வைக்கின்றது. தொடர்மாடிக் கட்டிடங்களில் புகைப்படலம் ஊடுருவுவது எப்படி?

கதவினிடுக்குகள் மூலம் குளிர் மட்டுமல்ல புகையும் உட்பிரவேசிக்கின்றது. யன்னலின் சிறு இடைவெளியால் காற்றுடன் புகையும் கலக்கின்றது. தண்ணீர்க் குழாய்களுக்கு அண்மித்த வெற்றிடங்கள், தொலைபேசி - தொலைகாட்சி இணைப்புகளுக்கான சிறிய பாதை என்பன கூட 'தம்' பிடித்து பிறரின் புகை நாற்றத்தை நம் வீடுகளில் வெளிவிடும் வாய்களாகின்றன.

பத்து தொடர்மாடி கட்டிடங்களில் ஒன்றை மட்டும் புகைபிடிப்பவர்களுக்காக ஒதுக்கலாம் அல்லது ஒவ்வொரு கட்டிடத்தின் மொட்டை மாடியை மட்டும் புகைபிடிக்க அனுமதிக்கலாம் என ஆராயப்படுகின்றது.

இதனால் எரிந்த சாம்பல் கூட வீட்டுக்குள் எஞ்சியிருக்காது எனக் கருதப்படுகின்றது. வீட்டுக்குள் எப்படித் தடை செய்யலாம்? அது கனடியன் என்ற அந்தஸ்தை அசிங்கப்படுத்தி விடுமே என்று நீங்கள் நினைத்தால், உங்கள் மீது புகைக் குண்டினை வீசவா முடியும்?

தொடர்மாடிக் கட்டிடம் ஒன்றில் வசிக்கும் ஏற்கனவே புகைபிடிக்கும் பழக்கமுள்ள ஒருவரை மரணம் வரை புகை பிடிக்கத் தடை செய்யும் எந்தப் புதிய சட்டமும் அகற்ற முடியாது. புகை பிடிப்பது உங்களது உரிமை, மறுப்பதற்கில்லை. ஆனால் அது மற்றவரைப் பாதிக்காத வரை!

'இரண்டாவது புகை' யின் நாற்றம் மட்டுமல்ல சீற்றமும் மிகவும் கொடூரமானது.



"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

"Honesty, Integrity, Professionalism"

சாள்ஸ் தேவசகாயம் MA
Sales Representative
Direct: 416-284-5555
24Hrs: 416 284 4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough, Ont M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty Brokerage






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* LOANS
* MORTGAGES
* CREDIT COUNSELING
* INSURANCE (AUTO & LIFE)
* REAL ESTATE
* ACCOUNTING
* SCHOLARSHIP PLAN
* TRAFFIC TICKETS
* INSURANCE CLAIMS

J.R.B UNIVERSAL INC.
Almost All Services Available

Bus: (416) 752-7555
Fax: (416) 752-7556
Cell: (416) 937-9081

2390 Eglinton Ave, E. Suite-206B Scarborough-ON M1K 2P5



R.R.Rajkumar
B.Com (Hons) M.B.A


# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வடஅமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ1 கொழும்பு வீடியோ

## DIVISION OF ST- FRANCIS

# DIGITAL PHOTO STUDIO

**அனைத்து விதமான போட்டோ வீடியோ படப்பிடிப்புகள்**
**எல்லா விதமான போட்டோ வீடியோ வேலைகள்**

CUSTOM FRAMING & WOOD PLAQUES LIMINATION

திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்த நாள்
அரங்கேற்றம்
குடும்பப்படம்
குழந்தைப் படம்
பாஸ்போட்
சிற்றிசன்
லான்டட் காட்
ஐ.டீ போட்டோ
கறுப்பு வெள்ளை
இன்னும் பல




Puberty Ceremony
Wedding
Birthday
Arangetram
Baby Photo
Family Photo
Passport
Citizen
ID Photo
(Colour / B/W)
P.R Card Etc..

**50% OFF**

| | REG | 50% |
|---|---|---|
| Aranketram | $4000.00 | $2000.00 |
| Aranketram | $2000.00 | $1000.00 |
| Aranketram | $1500.00 | $750.00 |

மண்டபங்களில் **(Banquet Hall)** நடக்கும் விழாக்களுக்கு இலவசமாக எடுக்கப்படும்
பிறந்ததின விழாக்களுக்கு ஒரு **Roll** இலவசம்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கு 2-**Roll** இலவசம்
திருமணவிழாவுக்கு 3-**Roll** இலவசம்
அல்பம், பிறேம் என்லாஸ்மென்ற் **25%OFF**

**Digital Leather Album $500**

2296 EGLINTON AVE. EAST AT BIRCHMOUNT RD,
UNIT 3 &6 LOWER LEVEL **SCARBOROUGH**

**TEL: 416-752-4444 FAX: 416-755-2333**

**www.a1saintfrancis.com**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற

சிவா
கணபதிப்பிள்ளை

அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca


# Reforming Canada's Refugee System

**By: Carol Goar**

Life-and-death decisions are rare for most of us.Peter Showler has made thousands. He doesn't know how the majority turned out. He can't talk about the details. Showler was chairperson of the Immigration and Refugee Board from 1999 to 2002. For six years before that, he was a member of its refugee determination division. During that period, he and his colleagues decided the fates of a quarter of a million refugee claimants. Roughly half were allowed to stay in Canada. The other half faced deportation.

Showler, who now teaches refugee law at the University of Ottawa, has just written a book that takes readers into the private hearing rooms where asylum seekers tell their harrowing stories and ordinary Canadians decide whether their accounts are credible, knowing they hold the hopes - and sometimes the lives - of fellow human beings in their hands.

*Refugee Sandwich: Stories of Exile and Asylum* is a compellingly readable book.

It is also an urgent plea to policy makers to fix a refugee system tainted by too many self-serving political appointees, too many lazy lawyers and too many unethical immigration consultants. 'This book is a tribute to those who try to do the job well and a condemnation of those who do not, "showler says, "It is a recognition that all parties to the process are sandwiched between the demands of fairness and efficiency, between the differences in cultures, between wealth and poverty, between the fearful chaos of the refugee experience and the logical and unrealistic expectations of law and government." He uses 13 fictional vignettes, drawn from his experience as a board member, to get inside Canada's refugee system.

Most highlight the extraordinary courage it takes for a refugee claimant to entrust his or her safety to a panel of strangers asking painful questions. Several illustrate the damage that irresponsible lawyers, exploitative consultants and impatient board members do to Canada's reputation and to human lives. One shows how a skilled board member can unravel a tissue of lies. Nearly all depict the fog of uncertainty, faulty communication, missing facts and moral ambiguity in which refugee decisions have to be made.

The anecdotes, Showler stressed in an interview, are not real-life cases with the names and identifying details changed. They are literary inventions designed to get at the truths that go deeper than facts. They are inhabited by characters with idiosyncrasies and emotions, who agonize, gossip and curse. He began writing the stories - partly as an outlet for his frustration - when he was a board member, set them aside when he became chairperson and finished the book after his term ended. Showler does not wish to convey the impression that Canada's refugee system is an irreparable mess. It is better than most. It is certainly better than its critics - capitalizing on post-9/11 xenophobia - contend.

But he make a powerful case for four reforms:
* Members of the Immigration and Refugee Board should not be appointed by the governing party. They should be chosen from a pool of qualified candidates by a non-partisan body. * Refugee claimants should not be left at the mercy of ill-prepared lawyers and unscrupulous consultants. The federal government should set up a national "Judicare" program to ensure that every asylum seeker has competent legal representation. * The Federal Court should not handle appeals of refugee decisions. It takes far too long and costs too much. A specialized tribunal, made up of people with expertise in the field, should be the final arbiter. * Failed claimants should not be allowed to delay their deportation by demanding a judicial review, then seeking a special dispensation from the minister, then asking for a risk assessment, then requesting a stay of removal. Once the tribunal has denied their appeal, they should be sent home.

Only one of these proposals in on Ottawa's radar screen. The Bloc Quebecois has a private member's bill before the House of Commons, calling for the kind of tribunal Showler recommends. The New Democrats support the concept, the Conservatives and Liberals are noncommittal. More ominously, there are now 50 vacancies (out of 150 positions) on the Immigration and Refugee Board. The Ottawa professor hopes he's wrong, but it looks to him as if the Conservatives are preparing to pack the board with their own friends and cronies. (Courtesy: Toronto Star)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES

*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும் எமது சேவை

DR. ILLANGO & ASSOCIATES

## DR. M. ILLANGO

B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை

## DR. MEHRAN MOJGANI

D.D.S. Dip. Perio,Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN

B.D.S,M.S,F.D.SR.C.S (Eng), General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)

## DR. ALI ADIPBFAR


D.D.S,M.D,F.R.C.D (C), Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO


B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG

B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**




**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள் இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org